மலர்-3 இதழ்-50 செப்டம்பர் 16-30 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

50 வது இதழ்




## செவ்வாய்க்கும் பூமிக்கும் உள்ள தொடர்பு

# போகர் உருவாக்கிய பழனி முருகன் ரகசியம்

# முருகனின் பல உருவங்கள்

கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் உடு மலைப்பேட்டை சாலையில் உள்ளது தென் சேரிகிரி. இங்குள்ள ஆலயத்தில் பன்னிரண்டு கரங்களோடும், அதில் ஆயுதம் ஏந்தியும் போர்க்கோளத் தோற்றத்தில் முருகன் அருள் பாலிக்கிறார்.

சென்னை அடுத்த மாமல்லபுரம் கல்பாக்கம் சாலையில் இருக்கிறது திருப்போரூர். இங்கு சுயம்பு மூர்த்தியாக முருகன் அருள்கிறார். இவர் பனை மரத்தால் ஆனவர். இங்கு சிதம்பர சுவாமி களால் நிறுவப்பட்ட சக்கரம் ஒன்று, முருகப் பெருமானுக்கு நிகராகப் போற்றப்படுகிறது.

திருச்சியில் இருந்து 26 கி.மீ. தொலைவிலுள்ள விராலி மலையில், ஆறுமுகங்களுடன் மயில் மீது அமர்ந்து இருபுறமும் வள்ளி தெய்வானை வீற்றிருக்க அருள்கிறார் கந்தக் கடவுள்.

திருவாரூரில் இருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ளது எண்கண் திருத்தலம். இங்கு அருள் பாலிக்கும் முருகப்பெருமான், எட்டுக்குடி மற்றும் சிக்கல் ஆகிய தலங்களில் அருளும் அதே தோற்றத்தில் அருள்கிறார்.

பிரணவத்திற்குப் பொருள் தெரியாத நான்முகனை சிறையில் அடைத்த ஐந்துமுக முருகனை ஓதிமலையில் தரிசிக்கலாம். கோவை அடுத்த மேட் டுப்பாளையம் அருகில் இருக்கும் இந்த ஆலயத்தில் நான்முகன் அடைபட்ட இரும்புச் சிறையும் உள்ளது.

பொதுவாக மயிலோடு முருகப்பெருமான் வீற்றிருக்கும் ஆலயங்களில், வலதுபுறம் திரும்பிய நிலையில்தான் மயில் காட்சி தரும். ஆனால் கோவில்பட்டிக்கும் சங்கரன்கோவிலுக்கும் இடையே உள்ள கழுகுமலையில் இடப்புறம் திரும்பியுள்ள மயில் மீது அமர்ந்தபடி அருள் கிறார், முருகப்பெருமான்.

காஞ்சீபுரத்தில் ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்திற்கும், காமாட்சி அம்மன் ஆலயத் திற்கும் இடையில் உள்ளது குமரக்கோட்டம். இது சோமாஸ்கந்த அமைப்பாகும். இந்த குமரக்கோட்டத்தில் கச்சியப்பருக்கு கந்த புராணத்தை இயற்ற, 'திகடச் சக்கர' எனும் முதல் அடி எடுத்துக் கொடுத்த வேலவனை தரிசிக்கலாம்.



www.aanmeegamalar.com





## பஜகோவிந்தம் பாடினால்

# கோதானம் செய்த புண்ணியம் கிடைக்கும்



கிருஷ்ணரை வழிபடும்போது மறக்காமல் "பஜகோவிந்தம்" பாட வேண்டும். கோவிந்தா என்ற சொல்லுக்கு "பசுக்களின் தலைவன்", "கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருபவன்", "பூமியை தாங்குபவன்" என்று பொருள்.

"கோ" என்றால் பசு, "இந்தா" வாங்கிக்கொள் என்று பொருள். பக்தி பரவசத்தில் மனதார நாம் ஆத்மார்த்தமாக கொடுக் கும் எந்தப்பொருளையும் கடவுள் பெற்றுக் கொள்வார் என்று வேதங்கள் கூறுகின்றன. அந்த வகையில் "கிருஷ்ணா கோவிந்த" என்றால் "கிருஷ்ணா பசுவை வாங்கிக்கொள்" என்று பொருள். அதா வது கிருஷ்ணருக்கு கோதானம் செய்ததாக அர்த்தப்படும்.

முகுந்தா என்று நாம் அழைக்கும்போது "மு" என்றால் முக்தியை அருள்வது, "கு" என்றால் இவ்வுலக இன்பங்களை அருள்வது, இவ்வுலகில் வாழ்வதற்கும், முக்தியை பெறுவதற்கும் கிருஷ்ணரே மூலவர் என்ற பொருளின் அடிப்படையில்தான் "முகுந்தா" என்று அழைக்கிறோம். கிருஷ்ணா, முகுந்தா, கோவிந்தா என்ற பலவிதமாய் பாசமாய் அழைத்து பக்தியுடன் பூஜித்தால் இறைவனின் அற்புத வரங்கள் நமக்கு கிடைக்கும்.

– ப்ரவீணாஅருண், பென்னாகரம்,
போன்: 9865791483

மற்றவர்களும் பயன்பெற அறிமுகப் படுத்துங்கள்....

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் வாட்சப் எண் மற்றும் இ–மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்

whatsapp: 8825844033
aanmeegamalar@gmail.com

www.aanmeegamalar.com

# பெருமாளுக்கு உகந்த புரட்டாசி

## திருப்பதி செல்பவர்களுக்கு பயனுள்ள தகவல்...



பெருமாளுக்கு உகந்த மாதமாகவும், பெருமாள் பக்தர்களுக்கு மகிழ்ச்சியான மாதமாகவும் திகழ்வது புரட்டாசி மாதமாகும்.

பெருமாள் கோவில்களில் பக்தர்கள் கூட்டம் வழிவதுடன், திருப்பதிக்கு செல்வதை பக்தர்கள் மிக முக்கிய கடமையாக கடைபிடித்து வருகின்றனர். அந்த வகையில் திருப்பதிக்கு செல்வதற்கு மிகவும் எளிமையான சில வழிமுறைகளைப் பார்ப்போம்.

பக்தர்கள் இயற்கை அழகை ரசித்தபடி பெருமாளை தரிசிக்க விரும்புபவர்கள், திருப்பதி மலை அடிவாரத்தில் இருந்து நடந்து திருமலைக்கு மலையேறிச் சென்று மலையப்ப சுவாமியை தரிசிப்பது மிகப்பெரிய வரம்.

திருப்பதியிலிருந்து திருமலைக்குச் செல்ல இரண்டுவிதமான பாதைகள் இருக்கின்றன.

திருப்பதி பஸ்ஸ்டாண்டில் இருந்து 5.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அலிபிரி வழியாகச் செல்வது ஒரு வழி.

மற்றொன்று சீனிவாச மங்காபுரத்துக்கு அருகில் உள்ள ஸ்ரீவாரிமெட்டு வழி.

பொதுவாக தமிழ்நாட்டில் இருந்து செல்லும் பக்தர்கள் அலிபிரி வழியைத்தான் தேர்வு செய்கிறார்கள். இந்தப் பாதையே நீண்ட நெடுநாட்களாக பயன்பாட்டில் இருந்து வருகிறது.

அகோபில மடத்தின் முதலாவது ஜீயர் சுவாமிகளான ஸ்ரீஆதிவண் சடகோப யதீந்த்ர மகா தேசிகன் என்னும் ஜீயர் ஸ்வாமிகளே திருமலைக்கு படிக்கட்டுகளை முதன்முதலில் அமைத்தவர்.

அலிபிரியிலிருந்து பெருமாள் குடிகொண்டிருக்கும் கோயில் 11 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

3,800 படிக்கட்டுகள் உள்ள இந்த வழியாக முதல் மலையில் இருந்து ஏழு மலைகளைக் கடந்து வர குறைந்தது 4 முதல் 6 மணி நேரம் ஆகும்.

இப்படியாக நடைபாதை வழியாக நடந்து வருபவர்களுக்கு இலவசமாக கோயில் நிர்வாகத்தால் அளிக்கப்படும் தரிசனம்தான் ‘திவ்ய தரிசனம்‘.

நடைபாதையில் பாதி தூரத்தில் கோயில் ஊழியர்களால் வழிபாட்டுக்குச் செல்வதற்கான அனுமதிச்சீட்டு வழங்கப்படுகிறது. இதை எடுத்துச்சென்று பக்தர்கள் சிறப்பு வழியில் சென்று வழிபடலாம்.

மலையேறிச் சென்று மலையப்பசுவாமியை தரிசனம் செய்வதென முடிவு செய்துவிட்டால், முதல் நாளே கீழ்திருப்பதி வந்து, தேவஸ்தானத்துக்குச் சொந்தமான ‘சீனிவாசன் காம்ப்ளக்ஸிலோ’, ‘விஷ்ணு நிவாஸிலோ’ அறையெடுத்துத் தங்கி, ‘அலமேலுமங்காபுரம்‘, ‘கோவிந்தராஜப் பெருமாள் கோயில்’ஆகிய கோயில்களில் தரிசனம் முடித்து இரவு ஓய்வெடுத்து மறுநாள் அதிகாலையில் மலை ஏறுவது மிகுந்த உற்சாகத்தைம் தரும்.

பஸ்ஸ்டாண்டிலிருந்தும், ரெயில் நிலையத்திலிருந்தும் 5 நிமிடத்துக்கு ஒரு பஸ் என்கிற ரீதியில் பஸ்கள் செல்கின்றன.

அரை மணி நேரத்துக்கு ஒரு முறை தேவஸ்தான இலவசப் பேருந்துகளும் செல்கின்றன.

அலிபிரியில் நம்முடைய லக்கேஜ்களை சிறிய



www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

# திருப்பதியில் தங்க...

திருமலையில் தங்குவதற்கு ஒரு அறை கண்டுபிடிக்க கடினமாக இருந்தால், இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் பயன்படுத்தி கொள்ளுங்கல் நண்பர்களே .*கோவிலுக்கு மிக அருகிலேயே கீழ் கண்ட மடங்கள் உள்ளன. அவற்றில் தங்கலாம். ஹோட்டலுக்குரிய ரூம் வசதிகளோடு உள்ளன.

மூல் மட் மின் Ph: 08772277499.
புஷ்பா மாண்டபம் Ph: 08772277301.
ஸ்ரீ வல்லபச்சரிய ஜீ மட் Ph: 08772277317.
உத்ததி மட் (திருப்பதி) Ph: 08772225187.
ஸ்ரீ திருமல காஷி மட் Ph: 08772277316.

ஸ்ரீ ராகவேந்திர
ஸ்வாமி மட் Ph: 08772277302.
ஸ்ரீ வைகனச திவ்யா சித்தன்டா
விவேர்டினினி சபை Ph: 08772277282.

ஸ்ரீ காஞ்சி
காமகோடி மட் மின் Ph:: 08772277370.
ஸ்ரீ புஷ்பகிரி மட் Ph: 08772277419.
ஸ்ரீ உட்டாரடி மட் Ph: 08772277397.
உடுப்பி மட் Ph: 08772277305.

ஸ்ரீ ரங்கம் ஸ்ரீமத்
ஆத்வான் ஆசிரமம் Ph: 08772277826.

ஸ்ரீ பரகலா ஸ்மிமி மட்
Ph: 08772270597, 2277383.
ஸ்ரீ திருப்பதி ஸ்ரீமன்னாரயன
ராமானுஜா ஜீயர் மட் Ph: 08772277301.

ஸ்ரீ சிருங்கரி சாரதா
மடம் Ph: 08772277269, 2279435.
ஸ்ரீ அஹோபீதா மட் Ph: 08772279440.

ஸ்ரீ திருமல காஷி மத் Ph: 222 77316
உடுபி மட் Ph: 0877 222 77305

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீதந்தி
ராமனுஜீயர் மட் Ph: 0877 222 77301

ஸ்ரீ காஞ்சி காமகோடி
பீட்டம் மட் / சர்வா மங்கலா கல்யாண
மண்டபம் Ph: 0877 222 77370
ஸ்ரீ வல்லபச்சரிய மடம் Ph: 222 77317
மந்திராலயா ராகவேந்திர சுவாமி மட் /
பிருன்தாவனம் Ph: 0877 222 77302
ஆர்யா வைசியா சமாஜம் எஸ்.வி.ஆர்.

## நாள் ஒன்றிற்கு 700 முதியவர்களுக்கு இலவசம்

நாள் ஒன்றுக்கு, 65 வயது கடந்த மூத்த குடிமக்கள் 700 பேர் இலவசமாக திருப்பதியில் எந்த வித தள்ளுமுள்ளு இல்லாமல் தரிசனம் செய்யலாம். அதற்கான வழிமுறைகள்.

❖ ஆதார் அட்டை அவசியம். ❖ 65 வயது முடிந்திருக்க வேண்டும் ❖ காலை எட்டு மணிக்கு குறிப்பிட்ட இடத்தில் அறிக்கை செய்ய வேண்டும். ❖ காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை தரிசனம் நேரம். ❖ தினம் 700 பேருக்கும் அனுமதி உண்டு. ❖ உதவி செய்வதெற்கென உடனொருவர் செல்ல அனுமதி உண்டு அவளுக்கும் ஆதார் அவசியம். ❖ காலை உணவு பால் இலவசம். ❖ அவர்களுக்கு 70 ரூபாய்க்கு 4 லட்டுகள் வழங்கப்படும். ❖ ஒருமுறை சென்றவர் 3 மாத காலத்திற்கு பின்னரே மீண்டும் அனுமதிக்கப்படுவர். ❖ இவை அனைத்தும் இலவச சேவையாகும்.

**இந்த தகவல்கள்அனைத்தும் திருப்பதி தேவஸ்தானம் அறிக்கை!**

ஏ.வி.டி.எஸ்.எஸ்.டி Ph: 0877 222 77436
ஸ்ரீரங்கம் ஸ்ரீமதி
ஆதித்யான் ஆஷ்ரம் Ph: 0877 222 77826
ஸ்ரீ வைகநாத ஆசிரமம் Ph: 0877 222 77282
ஸ்ரீ அஹோபில மட் பட் Ph: 08772279440
ஸ்ரீ சிருங்கேரி சங்கர மடம் / சாரதா
கல்யாண மண்டபம் Ph: 0877 222 77269
ஸ்ரீ வைசராஜர் மடம் மோதிலால்
பன்சிலால் தர்மசாலா Ph: 0877 222 77445

ஹோட்டல் நரிலமா
சௌல்ரி பி: 0877 222 77784

ஸ்ரீ சீனிவாச சொல்ரி Ph: 0877 222 77883
ஸ்ரீ ஹதிராம்ஜி மட் Ph: 0877 222 77240
கர்நாடகா விருந்தினர்
மாளிகை Ph: 0877 222 77238
தக்ஷிணா இந்தியா
ஆர்யா வியா முனிரட்ணம்
அறநெறிகள் Ph: 0877 222 77245
ஸ்ரீ சிருங்கேரி
சங்கர நீலம் Ph: 0877 222 79435
ஸ்ரீ ஸ்வாமி
ஹதிராஜ் முட்டம் Ph: 08772220015

பூட்டு போட்டு பூட்டி தேவஸ்தான அலுவலகத்தில் கொடுத்து விட்டால் போதும். அவர்கள் வழங்கும் ரசீதைக் காண்பித்து, அவற்றை நாம் மலையின் மீது சென்று பெற்றுக்கொள்ளலாம்.

இந்த மலைப் பாதையில் 2,400 படிக்கட்டுகள் ஏறி முடித்ததும், 'காலி கோபுரம்' என்னும் இடம் வரும். இங்குதான் சுவாமி தரிசனம் செய்வதற்குரிய அனுமதிச்சீட்டு வழங்கப்படும். அங்கேயே அன்னப்பிரசாதமும் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது.

இதன் பிறகு 1,400 படிக்கட்டுகள் கொண்ட 9 கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்க வேண்டும். மலையேறி வந்ததும், திருமலை பஸ்ஸ்டாண்டுக்கு எதிரில் உள்ள மாதவ நிலையத்தில் ரெஸ்ட்ரூம் செல்லவும், குளிப்பதற்கும் வசதிகள் செய்யப் பட்டிருக்கும்.

அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு நமது உடைமைகளை அங்குள்ள ஃப்ரீ லாக்கரில் வைத்துவிட்டு சுவாமி தரிசனம் செய்யச் செல்லலாம்.

மலைப்பாதை முழுவதும் 24 மணிநேரமும் பாதுகாப்பு வசதிகள், ஆம்புலென்ஸ் வேன் மற்றும் ரோந்துப் பணியாளர்கள் உண்டு.

இரவிலும் பக்தர்கள் செல்லும்விதமாக விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனாலும், அதிகாலை நேரத்தைத் தேவுசெய்வதே நல்லது.

பாதி தூரம் வந்ததும் ஏறுவதற்கு உடல் நலம் முடியாமல் போனால் ஆங்காங்கே உட்கார்ந்து பொறுமையாக வரவேண்டும்.

அப்போதும் முடியவில்லையென்றால் ஒரு சில இடங்களில் உள்ள இணைப்புச் சாலைகளின் வழியாக வந்து பஸ்ஸிலோ காரிலோ செல்லலாம்.

ஆனால் திவ்ய தரிசனத்துக்கான அனுமதி கேன்சலாகிவிடும். பிறகு நாம் சர்வதரிசனத்திலோ சிறப்பு தரிசனத்திலோ சாமி தரிசனம் செய்யலாம்.

மலைப்பாதை முழுவதும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், மற்றும் டாய்லெட் வசதிகள் உண்டு. அங்காங்கே சின்னச்சின்ன பெட்டிக்கடைகளும் உண்டு. பொதுவாக நாம் பழங்கள் மற்றும் கேரட் வெள்ளரி சாலட் வகைகள் எலுமிச்சைப்பழம் போன்றவற்றை உடன் எடுத்துச்செல்லாம்.

நாராயண ஸ்தோத்திரம், ஹனுமன் சாலிசா, போன்ற பக்திப்பாடல்களைக் கேட்டுக்கொண்டே செல்லலாம். அல்லது கோவிந்தனின் நாமத்தை உரக்க உச்சரித்துக்கொண்டும் செல்லலாம். பயண களைப்பில்லாமல் உத்வேகத்துடன் செல்லலாம்.

ஏழுமலைகளும் எம்பெருமான் வாசம் செய்யும் புனித ஸ்தலமென்பதால் காலணிகள் அணியாமல், மது, சிகரெட், மாமிசங்களைப் புறக்கணித்து பயபக்தியுடன் சென்று இறைவனை வழிபடுவது நல்ல பலனை அளிக்கும்.

வருடத்தின் எந்த மாதத்திலும் மலையேறிச்சென்று வழிபடலாம் என்றாலும், ஏப்ரல், மே போன்ற கோடை கால மாதங்களையும் அக்டோபர், நவம்பர் போன்ற மழைக்கால மாதங்களையும் தவிர்ப்பது நல்லது.

குடும்ப உறுப்பினர்கள், ஒருமித்த சிந்தனையுள்ள நண்பர்கள் இணைந்து நடைப்பயணம் மேற்கொண்டால், பயணமும் சோர்வாக இருக்காது. இனிமையாகவும் இருக்கும். தனி நபராக இருந்தால் மக்களோடு மக்களாக பயணம் செய்யுங்கள்.

மூன்றாம் பிறை தரிசனம் முற்பிறவி பாவத்தைப் போக்கும் என்பார்கள். சூரியனும், சந்திரனும் ஒரே ராசியில் இணைவது அமாவாசை திதியாகும். ஒவ்வொரு அமாவாசைக்கு பிறகு வரும் மூன்றாம் நாள், மூன்றாம் பிறை நாளாகும். அமாவாசைக்கு மறுநாள் நிலவு தெரிவதில்லை. ஆனால், மூன்றாம் நாளான துவிதியை திதியில் தெரியும் நிலவு, அழகாகவும், பிரகாசமாகவும் இருக்கும். மூன்றாம் பிறையானது இரவு வருவதற்கு முன்னே 6.30 மணியளவில் தோன்றும் பிறையாகும்.

மூன்றாம் பிறையை தெய்வீக பிறை என்றே சொல்லலாம். இந்த மூன்றாம் பிறையைத் தான் சிவன் தன்முடி மீது அணிந்திருக்கிறார். மூன்றாம் பிறையை பார்த்தால் மனநிறைவும், பேரானந்தமும், மன அமைதியும் கிடைக்கும். மனக்கஷ்டங்கள், வருத்தங்கள் எல்லாமே நீங்கும்.

மூன்றாம் பிறை பிறந்த கதை :

ஒருமுறை விநாயகப் பெருமான், சிவனின் அதிகாரத்தையும், பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டார். பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பின் விநாயகர் அனைத்து உலகங்களையும் பார்வையிட சென்றார். எல்லா உலகத்தையும் பார்வையிட்ட விநாயகர் சந்திரனையும் பார்க்க சென்றார். சந்திரன் ஒரு முழுவெண்மதி என்பதால், விநாயகரின் திருவுருவை பார்த்து பரிகசித்தான்.

இதனால் கோபமுற்ற விநாயகப்பெருமான் உன் அழகு இன்று முதல் இருண்டு உன்னை உலகத்தார் வணங்க மாட்டார்கள் என்று சாபமிட்டார். விநாயகரின் சாபத்தால் சந்திரனின் அழகு குன்றியது. பின் சந்திரன் பொலிவிழந்தான். இதனால் கவலை அடைந்த சந்திரன் மனம் வருந்தியதுடன், சிவனை நோக்கி கடும் தவம் இருந்து பழையபடி முழுவெண்மதியை பெற்றான். முழுமதி நாளில் சந்திரனை வழிபடுவது சந்திர தரிசனம் ஆகும்.

மூன்றாம் பிறையை வணங்குவதால் ஏற்படும் நன்மைகள் :

சந்திரனை தரிசிக்கும் வேளையில், கையில் காசை வைத்து மூடிக்கொண்டு வலமாக மூன்று முறை சுற்றி, மீண்டும் ஒரு முறை பிறையை தரிசித்து வணங்க, பெண்களுக்கு மாங்கல்ய பலம் ஏற்படுகிறது.

மூன்றாம் நாளில் சந்திர தரிசனம் காண்பவர்களுக்கு ஞாபக சக்தி அதிகரிக்கும். மனக்குழப்பம் நீங்கும். கண் பார்வை தெளிவாகும்.

மூன்றாம் நாள் வரும் சந்திரனை அதாவது மூன்றாம் பிறையை பார்த்தால் ஆயுள் கூடும் என்பது நம்பிக்கை.

சந்திரனின் நட்சத்திரங்களான ரோகிணி, அஸ்தம், திருவோணத்தில் பிறந்தவர்கள் தங்களது வாழ்நாள் முழுவதும் இந்த மூன்றாம் பிறை தரிசனம் கண்டால் சந்திரனின் பரிபூரண அருளைப் பெறலாம்.

# மூன்றாம்பிறை தரிசனமும் அற்புதமான பலன்களும்



www.aanmeegamalar.com







# கோவிலுக்குச் செல்வது நல்லதா? கெட்டதா?

"கோவிலுக்குச் செல்வது நல்லதா, கெட்டதா?" என்று ஓஷோவைப் பார்த்து அவரின் சீடர் கேட்ட கேள்விக்கு, ஓஷோ மிக அற்புதமாக பதிலளித்துள்ளார்.

ஓஷோவின் பதில்....

"நல்லது, கெட்டது, நம்பிக்கை எல்லாம் ஒரு தனி மனிதனைப் பொறுத்த விஷயம்.

என்னைப் பொறுத்தவரையில் சாதாரண மக்களுக்கு, இது பொய்யான ஆறுதல் தரும் கூடம்! மற்றபடி இதனால் எந்த நன்மையும் இல்லை.

ஆனால் பல பேர் இதை வைத்துக்கொண்டு பிழைப்பு நடத்துகிறார்கள். பாமர மக்களை ஏமாற்று கிறார்கள்.

உங்களால், அந்த சிலையை ஒரு அன்பு உருவமாகப் பார்க்க முடிந்தால், ( ராமகிருஷ்ணரைப் போல) உங்களால் பக்தி யோகத்தில் முன்னேற முடியும்.

ஆனால் இப்படிப் பார்ப்பவர்கள் எத்தனை பேர்?

அந்த மனப்பக்குவம் யாரிடம் இருக்கிறது?

கோவிலுக்குப் போகும் 100–க்கு 99–பேர்கள், "எனக்கு அது வேண்டும், இது வேண்டும்" என்று வேண்டிக் கொள்ளத்தான் போகிறார்கள்.

அதாவது "வேண்டிக்கொள்ள!" கைமாறாக, காசு போடுகிறேன், தலை முடியைக் கொடுக்கிறேன் என்று வேறு வியாபாரம்! இதுதான் ஆன்மீகமா?

ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் வேண்டிக் கொள்ளுவது உங்களிடமேதான்!

அதாவது எதிரே உள்ள சிலையை முன்னிறுத்தி உங்கள் உயிர்த்தன்மையிடம், உங்கள் தெய்வீகத்தன்மையிடம்தான் வேண்டிக் கொள்கிறீர்கள்!

அதுதான் உங்களுக்கு அருள் செய்கிறது. இதற்கு எதற்காக கோவிலுக்குப் போக வேண்டும்?

– ஓஷோ



www.aanmeegamalar.com

செவ்வாய்க்கும் பூமிக்கும் உள்ள தொடர்பு

# செவ்வாயின் உதவியுடன் பூமியை காக்க போகர் உருவாக்கிய பழனி முருகன்

வேலவனை பூஜித்தால் நோய் நொடிமட்டுமல்ல, செல்வ வளமும் பெருக்குவார் என்பது ஆன் றோரின் நம்பிக்கை அந்த வகையில் சித்தர்கள் பூமியான பழனியின் ஆச்சரியம் மற்றும் அதிசயம் அங்கு நிறுவப்பட்டிருக்கும் சிலையே.

அப்படிப்பட்ட அற்புதச்சிலையை பிரதிஷ்டை செய்ததோடு மட்டுமல்லாமல் அதை செயல்பட வைக்க போகர் தன் ஜீவ மற்றும் ஆத்ம சக்தியை அதற்குள் பிரதிஷ்டை செய்தார்.

ஒரு நாள் இரண்டு நாள் அல்ல 200 வருடங்கள் அந்த மாபெரும் தவத்தை செய்து நிறைவேற்றினார். ஒரு துளியும் அளவு தப்பாத துல்லியம் என்பது அந்த சிலையின் நிர்மாணத்தில் உள்ளது. பதினெட்டு சித்தர்களின் திறன்களும் அதில் அடங்கி இருந்தது. இந்த உலகின் பெரும் பகுதி அழிவு என்பது இந்த சிலை யினால் காப்பாற்றும் அளவிற்கு அந்த சிலையானது அமைக்கப்பட்டது.

இந்த சிலை என்ன செய்யும் என்று கேட்டால் ஆச்சரியம் கொள்வீர்கள்.

நாம் சூப்பர் மார்க்கெட் போன்ற பகுதிகளுக்கு சென்றோமேயானால் கவனித் திருப்போம் ஒரு பொருளை வாங்கியவுடன் அதை பணம் செலுத்தும் இடத்திற்கு கொண்டு சென்று அதை காட்டினால் அதில் உள்ள மின்னணு குறியீட்டை அந்த சிஸ்டம் படித்து பார்த்த உடனே அது தொடர்பான அனைத் துவிதமான தகவல்களையும் வெளியே கொண்டு வந்துவிடும்.



அந்த நுணுக்கம் தான் இந்த சிலையிலும் பயன் படுத்தப்பட்டுள்ளது. இந்த சிலையின் முன்பாக யார் சென்றாலும் அது உடனே அவர்களின் எண்ண அலைகளை படித்துவிடும்.அதை அப் படியே திருப்பி பல மடங்காக தந்துவிடும்.

அதை தவிர அதற்கு வேறு எதுவும் தெரியாது. நாம் அந்த சிலையின் முன்பாக சென்று கடந்துவிட்ட அந்த நொடியே நாம் மாறி யிருப்போம். அந்த மாற்றத்தை மட்டும் நாம் புரிந்திருக்கவே மாட்டோம்.

இன்னும் சொல்வதானால் அதை நாம் தான் புரிந்துகொள்ளாமல் அதை பயன்படுத்த தெரியாமல் விழிப் புணர்வுத்தன்மை இல்லாத கார ணத்தால் வாழ்வில் உடல் மற்றும் மனநோயால் அவதிப்பட்டு வருகிறோம்.

செவ்வாயின் கதிரை உள் வாங்கும் மைக்ரோ ரிஸீவரான இந்த சிலை மட்டும் இந்த பூமியில் நிறுவப்படவில்லை எனில் இந்த பூமி இருந் திருக்காது.

உலகமெங்கும் தன்னுடைய ஆன்மீக ஆய்வுகள் அனைத்திலும் வெற்றி கண்ட போகர் பெருமான் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணி பூமி மற்றும் ரத்தம் சம்பந்தபட்ட கிரகமான செவ்வாயின் கதிர்வீச்சு இந்த பூமிக்கு சீராக கிடைத்தால் இந்த பூமிக்கு சுபிட்சம் கிடைக்கும் என்று எண்ணினார் அதன் விளைவாகத்தான் தண்டாயுதபாணி சிலையை நிர்மானித்துள்ளார்.

இந்த பூமியில் நடக்கும் இயற்கை மாற்றங் கள், போர் மற்றும் உடல் ஆரோக்கியம் என்பது செவ்வாயின் கதிர்வீச்சை பொறுத்தே அமை கிறது. ஏனெனில் செவ்வாய் தான் அதற்கு அதிகாரி போல். அதனால் தான் அதனை சீர் செய்வதன் மூலம் பூமிக்கு நன்மைகள் செய்ய முடியும் என எண்ணினார்.

உலகம் எங்கும் சுற்றி ஆய்வு செய்து பார்த்ததில் செவ்வாயின் கதிர்வீச்சு பூமியில் வைத்தீஸ்வரன் கோவில் மற்றும் பழனி தலத்தில் மட்டுமே









அதிகமாக விழுகிறது என்பதை கண்டறிந்தார்.

இந்த இரண்டு தலத்திலும் பழனி மலையின் மேல் பகுதியில் மட்டும் சுமார் 95 சதவீதற்கும் மேலாக விழுவதை கண்டுணர்ந்தார்.அதன் பின்னர் தான் அணைத்து சித்தர் பெருமக்களை யும் கூட்டி செவ்வாயின் கதிர்வீச்சை செம்மை படுத்த என்ன செய்யலாம் என ஆலோசனை செய்தார்.

அந்த ஆராய்ச்சியின் முடிவில் தான் இந்த யோசனை அவர்களுக்கு உதித்தது.பாஷாணங்கள் மொத்தம் 64.

இதில் இயற்கையாக 32–ம், செயற்கையாக 32 பூமியில் கிடைக்கிறது.

அதில் அவர்கள் எடுத்ததோ வெறும் ஒன்பதை மட்டுமே. அந்த ஒன்பதிலும் 4,448 மூலிகைகளின் சாரம் அடங்கியுள்ளது. 81 வகை உபரேஷன்களின் தன்மை அதில் அடங்கி உள்ளது.

இந்த ஒன்பது வகையான பாஷாணங்கள் தனித்தன்மைகள் ஆராயப்பட்டன. ஒவ்வொரு பாசனத்தில் அளவுகள் தீர்மானிக்கப்பட்டன. செய்யப்போகும் முறைகள் தீர்மானிக்கப்பட்டன. இத்தனைவிதமான மாபெரும் ஆய்வுகளுக்கு பின்னரே அந்த சிலை நிர்மாணம் செய்யப்பட்டது.

ஒன்பது பாஷாணங்களும் அதன் விகிதாச் சாரப்படி கலக்கும்போது அது செவ்வாயின் கதிர்வீச்சை அப்படியே உள்வாங்கும் திறனை பெரும் அளவிற்கு செய்யப்பட்டது. சிலை மொத்தம் மூன்று அடுக்குகளை கொண்டு செய்யப்பட்டுள்ளது.

மேலடுக்கு செவ்வாயின் கதிர்வீச்சை ஈர்க்கும் விதமாகவும் அதன் அடுத்த அடுக்கு அதை கடத்தி உள்ளே கொண்டு செல்லும் விதமாகவும் உள் அடுக்கானது அதை சேமிக்கும் விதமாகவும் உருவாக்கினார்கள்.

மேலும் அதிசயமாக அது கதிர்வீச்சின் தன்மையை சீர்படுத்தி வெளியற்றவும் செய்தது.

இதன் அடிப்படை தத்துவம் எளிதாக சொல்வ தானால் செல்போன் டவர். அது எவ்வாறு வெளியில் இருந்து அலைகளை பெற்று நமக்கு கிடைக்க செய்கிறதோ அந்த சூத்திரம் தான்.

தான் கற்றுணர்ந்த வித்தைகளை மொத்தம் தன் குருவிற்கு பெருமை சேர்க்கும் விதமாக இந்த சிலை செய்வதற்காக போகர் பயன்படுத்தினார் என்று சொன்னாலும் மிகை ஆகாது.

சிலை செய்து முடித்தபின்னர் தன்னுடைய ஜீவசக்தியை கொண்டு பிராண பிரதிஷ்டையும் செய்தார். தற்போது அந்த சிலை நூறு சதவீதம் செவ்வாயின் கதிர்வீச்சை உள்வாங்கும் கருவி ஆகவே மாறிவிட்டது. ஒழுங்கில்லாமல் வரும் கதிரலைகளை ஒழுங்கு படுத்தி வெளியேற்ற ஆரம்பித்தது.போகர் சாதனையும் நிறைவேறியது.

ஒரு ஆச்சரியமான உண்மை என்னவெனில் இந்த தண்டாயுதபாணி சிலை ஒன்று தான் இந்த உலகிற்கே பாதுகாவல், இந்த சிலை அமையாமல் போயிருந்தால் இந்த பூமி என்றோ தன்னுடைய அழிவை சந்தித்திருக்கும்.

நன்றி: பழனியின் அற்புத ரகசியங்கள்

# பழநி முருகனைப்பற்றி...

- ❖ பழநி முருகன் விக்ரகத்திற்கு, நல்லெண்ணெய், பஞ்சாமிர்தம், சந்தனம், விபூதி ஆகிய நான்கு விதமான அபிஷேக பொருட்கள் மட்டும் உபயோகிக்கப்படுகிறது.
- ❖ மார்கழி மாதத்தில் மட்டும் பன்னீர் உபயோகப் படுத்தப்படுகிறது. இவைகளில் சந்தனம், பன்னீர் தவிர மற்ற அபிஷேக பொருட்கள் முருகனின் சிரசில் வைத்து, உடனே அகற் றப்படுகிறது.
- ❖ முடி முதல், அடி வரை அபிஷேகம் என்கிற முழு அபிஷேகம் சந்தனத்துக்கும், பன்னீரும் மட்டும் தான். இதில் சிரசு விபூதி என்பது சித்தர் உத்தரவால் பக்தர்களுக்கு வழங்கபடுகிற ஒரு பிரசாதம் அது கிடைப்பது மிக புண்ணியம்.
- ❖ ஒருநாளைக்கு ஆறு முறை தண்டாயுதபாணிக்கு அபிஷேகம் அலங்காரம் செய்யபடுகிறது. இது ஐந்து முதல் ஏழு நிமிடத்துக்குள் முடிந்துவிடும்.
- ❖ அபிஷேகம் முடிந்து அலங்காரம் செய்துவிட்டால், பின்னர் அடுத்த அபிஷேகம் வரை மாலை சாற்றுவதோ, பூக்களால் அர்ச்சனை செய்வதோ கிடையாது.
- ❖ இரவில் முருகனின் மார்பில் மட்டும் வட்ட வடிவில் சந்தனக் காப்பு சார்த்தப்படுகிறது.
- ❖ விக்ரகத்தின் புருவங்களுக்கிடையில் ஒரு பொட்டு அளவுக்கு சந்தனம் வைக்கப்படும். முன்னொரு காலத்தில் சந்தன காப்பை முகத்திலும் சார்த்திக் கொண்டிருந்தனர். பின்னாளில் இந்த முறை மாற்றப்பட்டது.
- ❖ தண்டாயுதபாணி விக்ரகம் மிகுந்த சூடாக இருக்கும். ஆதலால் இரவு முழுவதும், அந்த விக்கிரகத்திலிருந்து நீர் வெளிப்படும். இந்த நீரை அபிஷேக தீர்த்ததுடன் கலந்து, காலை அபிஷேகம் நடக்கும் போது, அங்கு இருக்கும் பக்தர்களுக்கு பிரசாதமாக விநியோகம் செய்கிறார்கள்.
- ❖ அம்பாள், முருகர், அகத்தியர் இவர்களுடைய உத்தரவுக்கு பின் தான் போகர் இப்படி ஒரு சக்தி வாய்ந்த சிலையை செய்ய முயற்ச்சியே எடுத்தார். இதற்காக 4000 மேற்பட்ட மூலிகைகளை பல இடங்களிலும் சென்று தெரிவு செய்து கொண்டு வந்தார். 81 சித்தர்கள் இந்த நவபாஷாணத்தை போகர் சொற்படி தயார் பண்ணினர். இது பொது நல எண்ணத்துடன் செய்யப்பட்டதால் காலமும், இயற்கையும் தன் சீற்றத்தை குறைத்துக் கொண்டு சித்தர்களுக்கு உதவி செய்ததாக புராணங்கள் குறிப்பிடுகின்றது.
- ❖ முருகன் மேற்கு திசை நோக்கி அருள்புரியும் வண்ணம் உள்ளதால், மலை நாடு என்று புகழப்படும் கேரளா மிகுந்த செழிப்படைவதாக கேரள மக்களின் நம்பிக்கை. எனவே, கேரள நாட்டில் உள்ளவர்களுக்கு பழனி முருகன் குல தெய்வமாக விளங்குகிறார்.
- ❖ சித்தர்களால் கட்டப்பட்ட இத்திருக்கோயிலில், சித்தர்களின் சித்து வேலை இன்றும் நிகழ்வதாக நம்பப்படுகிறது. ஒரு சில பக்தர்களுக்கு நேரடியான அனுபவமும் உள்ளதால், இத்திருக் கோயிலில் சித்தர்களின் ஆட்சி இன்றும் உள்ள தாக கூறப்படுகிறது.
- ❖ தண்டாயுதபாணி சிலைக்கு இடது பக்கத்தில் ஒரு சின்ன மரகத லிங்கம் உள்ளது.
- ❖ இந்த மரகத லிங்கம் இருள் சூழ்ந்து எந்தவித ஒளியும் இல்லாமல் இருப்பதால் அவரை தரிசிக்க வலதுபக்கமாக சென்று, தீபம் காட்டும்போது மட்டுமே அந்த லிங்கத்தை தரிசிக்க முடியும்.
- ❖ பழனியில் இரண்டு மரகத லிங்கம் உள்ளது. ஒன்று முருகர் சன்னதியில், இன்னொன்று போகர் சமாதியின் மேல் இந்த இரண்டையுமே போகர் பூஜை செய்ததாக செவிவழிச் செய்தி கூறப்படுகிறது.



# கும்பாபிஷேகத்திற்கு பயன்படும் அஷ்ட பந்தன கலவை



கோவில்களில் கும்பாபிஷேகம் செய்யும்போது விக்கிரகத்திற்கும் பீடத்திற்கும் இடையில் ஒரு வித கலவையை புதிதாக மாற்றியமைப்பார்கள் இந்த கலவைக்கு பெயர் "அஷ்ட பந்த கலவை" என்று பெயர் இதை சிற்பிகள் "அஷ்ட பந்தன மருந்து" என்று அழைப்பார்கள்.

இந்த மருந்து கலவை, தெய்வங்களை பீடத்தில் அசையாமல் நிறுத்தும்.

அஷ்டபந்தன கலவை தயாரிப்பதற்குக் **கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, எருமை வெண்ணெய்** ஆகிய எட்டு பொருள்கள் தேவை.

கோயில் எழுப்புவதற்கான இடத்தைத் தேர்வு செய்வதிலிருந்து ஆலயம் எப்படி அமைய வேண்டும் என்பது வரை பல ஆகம விதிமுறைகள் இருக்கின்றன.

கோயிலைக் கட்டி முடித்த பிறகு, தெய்வ மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்வார்கள். ஒரு பீடத்தின்மீது தெய்வ மூர்த்தத்தை வைத்து,பீடத்திலிருந்து அகலாமல் இருப்பதற்காக, `அஷ்ட பந்தன மருந்து' சாத்துவார்கள். இந்த அஷ்ட பந்தன மருந்து, தெய்வ மூர்த்தத்தைப் பீடத்துடன் அழுந்தப் பிடித்துக்கொள்ளும். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை தெய்வ மூர்த்தங் களுக்கு அஷ்ட பந்தனம் சாத்த வேண்டும் என்பது ஆகம நியதி.

இவ்வாறு இந்த மருந்தை மாற்றும்போது நடைபெறும் விழாவே கும்பாபிஷேகம் எனப்படும். உலக உயிர்களெல்லாம் நலமாக இருக்க வேண்டுமென்றால், மூல தெய்வ மூர்த்தம், தனது ஆதார பீடத்தில் ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் உலகத்துக்கும் உலகில் வாழும் மக்களுக்கும் சிறப்பு. மூலவ மூர்த்தி தொடங்கி, எல்லா தெய்வங்களின் திருமேனிகளும் பீடத்திலிருந்து அசையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த அஷ்டபந்தன மூலிகை மருந்தைச் சாத்துகிறார்கள்.

அஷ்டபந்தனம் தயாரிப்பதற்காகவே தமிழில் ஒரு வெண்பா பாடப்பட்டுள்ளது.

"கொம்பரக்குச் சுக்கான்தூள் குங்கிலியம் கற்காவி
செம்பஞ்சு சாதிலிங்கம் தேன்மெழுகு தம்பழுது
நீக்கி எருமைவெண் ணெய்கட்டி நன்கிடித்து
ஆக்கல் அட்டபந்தனம் ஆம்"

இந்த மூலிகை மருந்து பல நாள்களானாலும் கெடாத வகையில் தயாரிக்கப்படும்.

## தயாரிக்கும் முறை:

கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன் மெழுகு, எருமை வெண்ணெய் ஆகிய எட்டு பொருள்களைச் சேர்த்து, உரலில் இட்டு இடிக்க வேண்டும். கொம்பரக்கு தொடங்கி ஒவ்வொரு பொருளாக உரலில் இட்டு இடிக்க வேண்டும். இடிக்கும் போது எருமை வெண்ணெய்யை சிறிது சிறிதாகச் சேர்த்து இடிக்க வேண்டும். அஷ்டபந்தன மருந்து கெட்டியாக கல்லுபோலவும் இருக்கக் கூடாது. குழைவாகவும் இருக்கக் கூடாது.

இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு பதமான நிலையில் இருக்க வேண்டும். இப்படி இருந்தால்தான் ஆதாரப்பீடத்தில் இருக்கும் இறைவனின் திருமேனியை நிலைநிறுத்த வசதியாக இருக்கும்.

இந்த மூலிகை மருந்துகளைக் கலந்து இடிப்பதற்கான பாத்திரங்கள், உரல், உலக்கை ஆகியவை மிகவும் தூய்மையாக இருக்க வேண்டும். இந்தப் பொருள்களை எந்தெந்த அளவு சேர்க்க வேண்டும், எவ்வளவு நேரம் இடிக்க வேண்டும் என்பதற்குக் கால அளவுகள் உண்டு. அஷ்டபந்தனம் தயாரிப்பவர்களின் வாக்கு, மனம், செயல் இவையாவும் இறைச் சிந்தனையிலேயே நிலைத்திருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

மேற்கண்ட கலவையில் தயாரிக்கும் மருந்து, கோவில் கோபுரத்தில் வைக்கப்பட்டிருக்கும் கலசத்தின் மூலம், சிலைக்கு தேவையான அனைத்து சக்திகளையும் ஈர்த்து தெய்வ மூர்த்தங்களுக்கு அபரிமிதமாக வழங்கும். இதனால்தான் குறிப்பிட்ட நாட்களுக்குப் பிறகு கும்பாபிஷேகம் செய்யப்படாத திருக்கோயில்களில் சக்தி குறைபாடு ஏற்படும் என்று ஆகமங்கள் குறிப்பிட்டுள்ளது.

இந்த மருந்தை 100 ஆண்டுகள் வரை கெடாதவாறு தயாரிக்க முடியும். ஆனாலும், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிதாகத் தயாரித்து, தெய்வ மூர்த்தங்களுக்கும் பீடத்துக்கும் இடையில் சாத்தி, கும்பாபிஷேகம் செய்வதென்பது நடைமுறையில் இப்போது வழக்கமாகியுள்ளது...

– சிவதினேஷ் விஸ்வரூபன்







# மரணத்தின் வேதனை

## தன்னாலே விளைவிக்கப்படுகிறது

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்:

“சாதாரணமாக. விலங்கு மனிதனுக்கு (தனது ஆன்ம இயல்புடனான இணக்கத்தினின்றும் விலகி இயற்கைக்கு மாறாக வாழ்பவன்), அகால மரணம் பயங்கரமான ஒன்று; அது பெரும் வேதனையை ஏற்படுத்தத்தான் செய்கிறது., ஆனால் துயரம் என்றழைக்கப்படுகின்ற இந்நிலை, அறியும் உணர்வை பெரிதுபடுத்தி அதனை உணர்ச்சியாக மாற்றும் ஆன்மாவினுடைய தீயப்பழக்கத்தால் தருவிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக பேரதிர்ச்சிகளையும் உடல் நடுக்கங்களையும் ஏற்படுத்துகின்ற திகில் கனவுகள், அல்லது ஆழ்ந்த பயங்கள், வருவதைப்போன்ற பேய், மற்றும் பிசாசுகளில் உள்ள நம்பிக்கையிலிருந்து வரும் துயரங்கள் உடல் உறுப்புகளில் மன முகவர் வாயிலாகத்தான் அத்தகைய கடுமையான வலி அனுபவிக்கப்படுகிறது என்பதை மெய்ப்பித்துக் காட்டுகின்றன.



இயற்கையான மரணம் அதாவது முதுமையில் அல்லது ஆன்மா தனது அழிவுறும் வடிவத்தை மாற்றுவதற்குத் தயாராக எந்த சமயத்தின்பொழுதும் பழுத்து பழமானது தானாகவே மரத்திலிருந்து கீழே விழுவதைப்போன்றது. ஒரு புயலாலோ அல்லது வேறு பெரிய ஆற்றலாலோ பச்சையாயுள்ள காய் மரத்திலிருந்து பறிக்கப்படும்பொழுது அது வெளிப்படுத்துவதைப்போன்ற எந்த எதிர்ப்பும் இல்லாமல், ஆனால் முதிர்ச்சிக்கு முந்திய இறப்பு நோய், விபத்து அல்லது மற்ற காரணங்கள் வாயிலாக ஆன்மா வலிமையான எதிர்ப்பை முன்வைக்கிறது; ஆதலால் கடுமையான வேதனை உடலில் காணப்படுகிறது. இந்தக்குழப்பம் மற்றும் உணர்வு நிலையின் போராட்டத்தில் மிகப்பெரிய வருத்தமும் நிராதரவான உணர்வும் ஏற்படுகிறது. மரணம் நிகழுகையில், ஆன்மாவின் மயக்கப்பட்ட இயல்பு ஆழ்ந்த துக்கத்தின் தொடக்கம் போன்று தன்னுணர்வற்றதாகிறது. (இறப்பிற்குப்பின் சூட்சும ஒளி உடலில் உள்ள ஓர் ஆன்மா, சூட்சும உலகில் அல்லது சொர்க்கத்தில் பூமியில் அதன் செயல்களின் தகுதிக்கேற்ப ஓர் உயர்ந்த அல்லது தாழ்ந்த தளத்தில் படிப்படியாக ஒரு புதிய வாழ்விற்கு விழிப்புறுகிறது. ஆன்மா சூட்சும உலகில் அதன் கர்மவினையைச் சார்ந்து முன்னரே தீ‘ர்மானிக்கப்பட்ட கால அளவிற்குத் தங்கியிருக்கிறது. அதன் பின்னர் அது ஒரு புதிய ஸ்தூல மறுபிறவியில் பூமிக்குத் திரும்புகிறது. ஆன்மாவானது மாள்வுக்குரிய அனைத்து பந்தங்களையும் தகர்த்து விடுதலை அடைந்து இறைவனிடம் திரும்பும் வரை இந்த வாழ்வு சாவு சுழற்சி தொடர்கிறது.) இறக்கும் போதுள்ள இந்த நிராதரவான நிலை ஒரு சிலரால் இறைவனது தண்டனையெனத் தவறாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

உண்மையில், ஆன்மாவானது, உடல் மாற்றங்களை, தன்னையே வெளிப்படுத்துவதற் கான உபாயங்களாகக் கருதாமல், விடாப்பிடியான மாற்றத்துடன் அடையாளம் காண்கின்ற, தானே உருவாக்கிய தீயப்பழக்கத்தின் வேலையே ஆகும்.

இவ்வாறு மரணபயம் (சமுதாய அல்லது பரம்பரை காரணமாகப் பெற்றது) மற்றும் அகால மரணத்தின் கடுந்துயரம் (உடல் மாற்றத்தை சாட்சியாகப் பார்க்காது அதனுடன் ஒருவர் அடையாளப்படுத்திக் கொள்வதன் விளைவு) தன்னாலேயே விளைவிக்கப்படுகிறது. இது வெறுக்கத்தக்கது மற்றும் பயங்கரமானது, சாதாரண வலிமிகுந்த மரணம் ஆத்ம ஞானம் அடைவதன் மூலம் தவிர்க்கப்படவேண்டும். அந்த உணர்வு நிலையில் யோகி,

1. இயற்கையான மரணத்தில் வலியை உணருவதில்லை.
2. மரணத்திற்கு பின்பும் உணர்வு நிலையையும் அடையாளத்தையும் தக்க வைத்துக் கொள்கிறார்.
3. அவரது ஆன்ம இயல்பில் வாழ்கிறார். மேலும் அந்த இயல்பை சர்வசக்தி வாய்ந்ததாகவும் அழிவற்றதாகவும் அறிகிறார்.

குருதேவர் இறைவனுடன் இ ணை ந் த வ ர ா த ல ா ல் , இறப்பைப் பற்றியும் இறந்தவர்களைப்பற்றியும் இறந்தவர்கள் இருக்குமிடத்தைப்பற்றியும் கூறுகிறார். அவ்வாறு கூறுவதற்கு இறைவனுடன் இணைந்த ஒரு மகானால் மட்டும்தான் இயலும். அவர் கூறுவதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டு பின்பற்ற வேண்டும். இதுபற்றி யாதொரு அறிவும் இல்லாத நாம் ஒவ்வொருவரும் குருதேவருக்கு இதயபூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்கவேண்டும். இந்தத் தொடரைப் படிக்கும் ஒவ்வொருவரின் சார்பாகவும் அனைவரின் சார்பாகவும் அன்பு குருதேவருக்கு நன்றியையும் வணக்கத்தையும் மிகுந்த பணிவன்புடன் தெருவித்துக்கொள்கின்றேன்.

மரணம் எப்படியெல்லாம் நிகழும் என்பது பற்றி பூஜ்ய குருதேவர் விளக்கியுள்ளார். ஆயுள் முடிவுற்று மரணம் நிகழ்ந்தால் அது இயற்கையான மரணம் என்றும் ஆயுள் முடிவுறாமல் நோய், விபத்து இவற்றால் மரணம் நிகழ்ந்தால் அது அகால மரணம் என்றும் கூறுகிறார். இன்றைய நாளில் பெரும்பாலானோர்களும் நோயிலும் விபத்திலும்தான் இறக்கின்றனர். கொடிய நோயின் காரணமாக இறப்பது என்றால் அது அவர்கள் தம் வாழ்நாளில் (முற்பிறவியிலும் இருக்கலாம்; இப்பிறவியிலும் இருக்கலாம்) செய்த தவறுகளின் விளைவுகளேயாகும் என்கிறார். தவறு செய்வதைக் குறைத்தால் இம்மாதிரியான இறப்புகள் குறைய நேரும், தவறு செய்வதால் இறைவனுடனுள்ள தொடர்பு துண்டிக்கப்படும். இறைவனுடன் வாழ்ந்தால் தவறு செய்வதைத் தவிர்க்க நேரும். அதைச் செய்வதும் இறைவனே !

பண்டைய காலத்தில் வாழ்ந்தோர்அதிகமானோர்களும் இறை நினைவுடன் வாழ்ந்தனர். அவர்கள் அடிக்கடி இறைவனை நினைத்துக் கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளவராக இருந்தனர் என்பது பல உண்மை நிகழ்வுகள் மூலம் தெரிய வந்ததுள்ளன. அவர்கள் இறைவனுடனுள்ள நெருக்கத்தை அதிகரிப்பதற்காக ஒரு நடைமுறையை கையாண்டிருந்தனர்.. அதனால் இறைவனின் நாமத்தை அடிக்கடி கூறிக்கொண்டிருப்பர், அவ்வாறு செய்வதால் இறப்பின்போது இறைவனின் நாமத்தைக் கூறினால் அந்த ஆன்மா இறைவனடி சேர்ந்துவிடும் என்று நம்பிகை கொண்டிருந்தனர். அதற்காக, இறைவன் நாமத்தை எப்பொழுதும் பயன்படுத்துவதற்காக அவர்கள் தம் குழந்தைகளுக்கு இறைவனின் பெயரை சூட்டியிருந் தனர். அவ்வாறு செய்தால் இறப்பின்

42
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக


ஆன்மிகமலர் மெயில் புக்
16-30 செப்டம்பர் 2018 17
www.aanmeegamalar.com

போது மகன் பெயரை அழைத்தவாறு இறைவனை அழைப்பதாகவும் இறைவனடி சேருவதற்கு அது ஒரு நல்ல உபாயமென்றும் நம்பியிருந்தனர். அவர்கள் இறைவனிடத்தில் மிகுந்த பக்தியுடையவர்களாகவும், விசுவாசமுடையவர்களாகவும் இருந்தனர். அதனால்தான் அந்த வழியை தேர்ந்தெடுத்தனர்.

ஆனால் இன்றைய காலத்தில் பக்தியும் குறைந்து விட்டது, அதே சமயம் குழந்தைகளுக்கு பெயர் சூட்டும் பொழுது இறைவனின் நாமத்தைச் சூட்டுவதிலும் பின்தங்கியுள்ளனர்; இறைவனை நினைக்கின்ற மனிதர்களும் அரிது. இறைவனிடத்தில் நம் அன்பு தானாகவே சென்றால் அது பக்தி எனலாம். அது வளர்ந்தால் தீவிர ஏக்கமாகும். அதை வளர்த்து 'அவனை' தன்னுடன் வைத்துக்கொண்டால் நோய், விபத்து போன்றவற்றைத் தவிர்க்கலாம்.

யார் எவ்வளவு பெரிய கல்வி கற்றிருந்தாலும் கேவலம் அழியும் பொருட்களான சொத்து, பணம், இவற்றை யார் எவ்வளவு சேமித்து வைத்திருந்தாலும், யார் எவ்வளவு பெரிய பதவியும் புகழும் உடையவராகயிருந்தாலும் அவை அனைத்தும் ஒரு நொடியிடையில் அழியக் கூடியவையே. அவற்றை மனித சேவைக்காக பயன்படுத்தினால் இறைவன் மகிழ்வான். யார் ஒருவர் எங்கும் நிறைந்த, என்றும் உள்ள, பேரன்பும் பேரமைதியும் உறைகின்ற, பேரானந்தமயமான, அதீத அழகுடையவனான, பரமாத்மாவான பிரபஞ்சத் தந்தையை உணர்ந் தறிந்து அவனுடன் இணைந்து வாழ்கின்றாரோ, அப்படிப்பட்ட மகாத்மாக்களை வெல்வதற்கு இவ் வுலகில் யாரும் இல்லை என்பது உறுதி. மனிதன் தவறுகள் இழைக்காமல் இறைபக்தியுடன் இறைவனுடன் இணைந்த மகாத்மாக்களை பின் பற்றினால் விபத்துக்களும் நோய்களும் இருக்க வாய்ப்பேதுமில்லை.



விபத்தும் நோயும் அகால மரணத்திற்குக் காரணமென்று கூறுகிறார் குருதேவர். இவை இரண்டும் நிகழ்வதற்குக் காரணம் மனிதர்களின் தவறுகளேயாகும். அனைத்து தவறுகளுக்கும் காரணமாக உள்ள இரண்டு அம்சங்கள் என்னவென்றால் அவை சுயநலம் மற்றும் பலனை எதிப்பார்த்துள்ள செயல்களேயாகும். இந்த இரண்டு அம்சங்களுடன் செய்கின்ற ஒவ்வொரு செயலும் தவறானதுதான். இறை விதிகளுக்கு உட்பட்டு செய்யும் ஒவ்வொரு செயலாலும், இறை அருளை அதிகரிக்கிறது மட்டுமின்றி அதனால் தம் வாழ்க்கையும் ஆனந்தமாக இருக்கும். ஆனால், அதற்கு மாறாக செயல்படுவதால்தான் எல்லா தீமைகளும் விளைகிறது, இறைவிதிகளுக்கு மாறாக வாழ்வதால் ஆயுள் ஆரோக்கியம் குறைய நேருகிறது,

சரி, தவறு செய்தாகிவிட்டது. அதற்கான தண்டனையையும் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்ளத்தானே வேண்டும். "உன் செயல் தவறானது" என்று தீர்ப்பு எழுதுவது இறைவன்தான். அதற்கு தண்டனையும் கிடைக்கப்போகிறது என்று உறுதியாகிவிட்டது என்று அறியவந்தால் உடனே என்ன செய்ய வேண்டுமென்றால், "சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல்" என்ற பழமொழிக்கேற்ப பிரபஞ்சத் தந்தையாகின்ற இறைவனை சரணடைவதே சிறப்பு. எல்லா பொறுப்பையும் அவனிடத்தில் ஒப்படைத்துவிட்டு நாம் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். அது மட்டுமின்றி, நாம் ஒவ்வொருவரும் 'தான் யார்' என்பதை உணர்ந்தறிந்தால், எல்லாம் இறைவனாகி விடுகிறது. எல்லாம் அவனுக்கு அர்ப்பணமாகும்போது, சரி, தவறு என்பதில்லையென்றாகிவிடுகிறது.

மயி ஸர்வாணி கர்மாணி
ஸன்யஸ்யாத்யாத்மசேதஸா
நிராசிர்ந்நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ
விகதஜ்வர:

நான் சரீரமன்று, நான் ஆத்மா, ஆத்மா ஒன்றாகும். ஆத்மாவான எனக்கு பிறப்பு இறப்பு மற்றும் இன்ப துன்பங்கள் எதுவும் இல்லை. நான் பிறக்கவில்லை. எனக்கு மரணமில்லை. இவ்வாறான ஆத்மஞான விவேகத்தினால் அனைத்து கர்மங்களையும் கர்ம பலன்களையும் முழுமையாக இறைவனில் அர்ப்பணம் செய்து, எதிலும் அகந்தையோ, பற்றோ அபிமானமோ ஆசைகளோ இல்லாமல் போர் செய்வாய். எந்தச் செயலும் இந்த முறையில்தான் செய்ய வேண்டும். வாழ்க்கையை போராக்கி எண்ணுகின்ற பட்சத்தில் இவ்வாறுதான் வாழ்க்கையை கடத்தவேண்டும் என்பது தெளிவாகிறது அல்லவா!

இவ்வுலகம் என்பது, இல்லாத ஒன்று என்றும் தாம் சத்தியஸ்வரூபமான ஆத்மாவுமாகிறது என்றும் திடமான விசுவாசம் வேண்டும். விதிக்கப்பட்ட எல்லா கடமைகளையும் இறைவனுக்காக மட்டும் செய்து திருப்தியுடன் வாழ வேண்டும். நான், என்னுடையது என்ற எண்ணம் இல்லாமலிருக்க வேண்டும். தனக்காக எதுவுமில்லை, அனைத்தும் இறைவனுக்காக, அனைத்தும் இறைவனே! என்ற மனநிலை வரவேண்டும். (பகவத் கீதை அத். 3 ஸ்லோகம்.30)

பூமிக்கு பிறப்பெடுத்து வந்த ஓர் ஆத்மாவினுடைய நிலை இதுதான். இந்த உலகத்தில் நமக்கென்று எதுவும் இல்லை என்பதை உணர்ந்தறிந்தால் உலகத்தில் சண்டையில்லை. இதுதான் வாழ்க்கை: மனித வாழ்க்கை.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

ஆன்மிக மாதமிருமுறை இதழ்

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com

# பெரியவாவிடமேவா...

ஒரு பாதிரியார் பெரியவாளை தர்சனம் பண்ண வந்தார். ஒரு பெரிய தட்டு நிறைய பழங்களை சமர்ப் பித்து விட்டு, தங்கள் மத வழக்கப்படி தலை, மார்பு, தோள்கள் இவற்றை விரல்களால் தொட்டு, ஒரு கிராஸ் போட்டுவிட்டு தன் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார். அவர் நிறைய படித்தவர்; அபரிமிதமான பேச்சாற்றலால், மதக் கொள்கைகளை அடுக்கிக் கொண்டே போனார். தங்கள் மதத்தைத் தவிர வேறு எந்த மதத்திலும் இப்பேர்ப்பட்ட அருமையான கொள்கைகள் இல்லவேயில்லை என்று நிலை நாட்ட விரும்பிய வேகம், வெறி அவர் பேச்சில் தொனித்தது......யாரிடம்?

“அன்புதான் எங்க கொள்கையில ரொம்ப முக்கியமானது; எல்லோரிடமும் வேற்றுமை பாராட்டாமல், அன்பு செலுத்தியவர் எங்கள் பிதா..” மேற்கொண்டு அவரை பேசவிடாமல் அவருடைய மனசாக்ஷியே தடுத்தது போல், பேச்சை நிறுத்திக் கொண்டார்.

காரணம், எங்கள் பிதா...என்று அவர் சொல்லி முடித்ததும் பெரியவா லேஸாக புன்னகைத்ததும், பாதிரியாரின் பேச்சு நின்றது.

“ஹிந்து மதத்லேயும் அன்புக்கு ரொம்ப முக்யத்வம் உண்டு! “அன்பே சிவம்“...ங்கறது பெரியவால்லாம் சொன்ன வாக்கு!

திருமூலர்ன்னு ஒரு பெரியவர் திருமந்திரம்ன்னு ரொம்ப ஒசத்தியான புஸ்தகம் எழுதியிருக்கார். அதுல அன்பைப்பத்தி, மனித நேயத்தைப் பத்தி ரொம்ப அழுத்தமா சொல்லியிருக்கார்.

விஷ்ணு சஹஸ்ரநாமம்...ன்னு மஹாபாரதத்ல வருது. அதுல, “கரணம், காரணம், கர்த்தா, விகர்த்தா”ன்னு பகவானுக்கு பேர் சொல்லப்பட்டிருக்கு. நீங்களும் ஜீஸஸ்ஸை கர்த்தர்..ன்னு சொல்லறேள். உங்க மதத்துக்கு எத்தனையோ காலத்துக்கு முன்னாடியிலி ருந்தே... நாங்க பகவானை “கர்த்தர்”ன்னு சொல்லிண்டி ருக்கோம்!

ஒங்களோட மதப்ரசாரங்கள் எல்லாத்துலயும், எங்களோட மதம், இதிஹாஸ புராணங்கள்,கடவுள்கள் எல்லாத்தையும் நிந்தை பண்றேள்! ஆனா, நாங்க எந்த மதத்தையோ, மதத் தலைவர்களையோ, தெய்வத்தையோ நிந்தனையாவோ, கொறையாவோ பேசறதில்லை! ஏன்னா ஹிந்து மதம்தான் மிச்ச எல்லா மதங்களுக்கும் தாயார் மாதிரி ! ஒரு தாயார், தன்னோட கொழந்தை துஷ்டனா இருந்தாக் கூட திட்ட மாட்டா!.....

நீங்கள்ளாம் ஹிந்து சமயப் பண்டிதாளை மீட் பண்ணறதுக்கு விரும்பாம, எதுவுமே தெரியாத பாமர ஜனங்கள் கிட்டப் போய் வாசாலகமா [வாய் ஜாலமாக] பேசறேள்! எங்களுக்கு அனுஷ்டானம் முக்யம்; ஒங்களுக்கு ப்ரசாரம் முக்யம்; அதோட பாமர ஜனங்கள்ட்ட போனதுமே ஒங்களோட மதத் தத்துவத்தை சொல்றதில்லை; பால் பவுடர், ரொட்டி, துணிமணி...ன்னு குடுத்து ஆசை காட்டி இழுத்துக்கறேள்! மொதல்ல அவாளுக்கு காப்பு மாதிரி பணம் குடுக்கறேள்... அப்றமா மதத்தைப் பத்தி பேசறேள்....”

பாதிரியார் சங்கடமாக நெளிந்தார்! உண்மையை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. ஆனாலும் பெரியவாளுடைய ஒவ்வொரு சொல்லும் அவரைக் கட்டிப் போட்டுவிட்டது!

“எங்கள் கர்த்தர்... தன் ரத்தத்தாலே பாவிகளின் பாவங்களைக் கழுவுகிறார்” கட்டக்கடைசியாக எதையோ சொல்ல வேண்டும் என்று சொன்னார்.

பெரியவா மறுபடியும் புன்னகைத்தார்....”கர்த்தர்... ரொம்ப கருணையானவர்...ங்கற ஸ்துதி ஞாயந்தான்! ஆனா மத்தவாளை நிந்திக்கக் கூடாதுங்கறதும் ஞாயந் தானே?....”

பாதிரியார், “நிந்தனை பத்தி என்னை சிந்தனை செய்ய வெச்சிட்டீங்க!..” என்று முக மலர்ச்சியோடு கூறவும், ஒரு பழத்தை ப்ரசாதமாக குடுத்தார் பெரியவா. அவருக்கும் திருக்கரத்தை உயர்த்தி ஆசி வழங்கினார்.

நம்முடைய மதத்தைப் பற்றி நாம் யாரிடமும் ப்ரசாரம் பண்ணி எதையும் ஸ்தாபிக்க அவச்யமேயில்லை! ப்ரசாரம் பண்ணுவதற்கு “இவ்வளவுதான் இதில் இருக்கிறது” என்ற full stopப்பை நம்முடைய மத நூல்களுக்கு [இதிஹாஸ, புராணங்கள், சாஸ்த்ரங்கள் என்று நீண்டு கொண்டே போகும்] நம்மால் வைக்க முடியாது. சங்கரர், மத்வர், ராமானுஜர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் இன்னும் ஏகப்பட்ட பக்த சிரோன்மணிகள் கூட ப்ரசாரம் பண்ணாமல், சாஸ்த்ர சம்மதமான தங்கள் அனுஷ்டானத்தில் நமக்கெல்லாம் வாழ்ந்து காட்டி யிருக்கிறார்கள்.

எனவே அவரவர் எந்தக் கடமையை செய்ய வேண் டுமோ, அதை ஒழுங்காக பண்ணிக் கொண்டிருந்தாலே, நம் மதத்துக்கு எந்த ஹானியும் வராது என்பதே மஹான்களின் வாக்கு!




அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033





ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# பச்சை மாமலை



திருமால் எப்படி பூலோகத்தைக் காப்பாற்றுகிறார்? சங்கு, சக்கரம், எதற்கு? எல்லா வேலைகளையும் வெற்றியாகப் பண்ணி விட்டு, அவருக்கு அவரே கொண்டாடுகிறார்.. வெற்றியை ஊதுதல்.

மற்றொரு கையிலே பூலோகத்தைச் சுழலச் செய்தான். அவனைப் பார்த்தவுடன் காதல் வரும் 'மால்' என்பதன் அர்த்தம். கிடைக்கனும் என்றால் கிடைக்கும். தலையில் எழுதியது. 'ரா நிதி ராது, போ நிதி போது' தியாகப் பிரும்மம் சாப்பாட்டிற்கே கஷ்டம் பாடுகிறார்.

இதுபோல இரண்டு தத்துவம் திருமால், காதலுக்கு அடைமொழி வைத்தால் திருமால்.

'பச்சை மாமலை போல் மேனி, பவளவாய் கமலச் செங்கண்

அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்..'

'வேறு ஊருக்குப் போ!' என்றால் போகமாட்டேன் என்கிறார் ஆழ்வார். ரங்கநாதனை பூமியில் பார்த்துவிட்டார். இந்த திருமாலுக்கு.. பச்சையாக இருக் கிறான்.. காப்பாற்று தல். பாசி படிந்த குளம்.. ஊருக்கு அச்சம்.. உபயோகப்படாது, பாசி படர்ந்துவிட்டது.

சுவாமி நின்று கொண்டு இருக்கிறான் திருப்பதி; தேவநாதன் திருவஹிந்திபுரம். பச்சை சில பேருக்கு மனதில் நின்றுவிடுவார். மூன்று சொற்கள் தனித்தனியாகப் பதிந்தால் தான், நெற்றுப் பண்ண முடியும். 175 வயது வரைக்கும் நினைவிலே இருப்பதற்குக் காரணம் இதயம். .. க்ஷல ழநயசவ பகவானை நினைவில் வைத்துக் கொள்ள, நிறம் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும்.



சங்கு, சக்கரம், பாதம் இப்பக்கம், அப்பக்கம் துணைவியார் .... க்ஷல ளணைணடநன றடிசனள, ளணைணடநன நெயரவல மனம் என்பதில் உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டு இருக்கிறது. செம்மொழி நிறைய வார்த்தை ஏற்படுத்த வேண்டும்.

துணைநலம் எப்பவும் நன்மையை படைக்கக்கூடிய துணை . திருமாலுக்கு துணைநலம் யார்? பெருமை சேர்க்கின்ற நாச்சியார் ஸ்ரீதேவி / பூதேவி சுவாமி 'சொல்' என்கின்றார். மகாலட்சுமி அனுக்கிரகம் பெரிதாயிற்றே. காலத்திற்கு உண்டான பைசா இருந்து கொண்டே இருக்கும். ஜாஸ்தியாக ஆக வேண்டும் என்றால், ஸ்ரீதேவியை வேண்டிக் கொள்ள வேண்டும். . அனுக்கிரகம் வேண்டும்.

திருமாலை காதல் செய்யுங்கள்; பூமாதேவியை மறக்கக் கூடாது . ஏன்? நிலநடுக்கம் எங்கும் வரக்கூடாது. பூமாதேவி அனுக்கிரகம். திருமாலுக்கு நாளுக்கு நாள் சிறப்பு ஏற்படும். 'ஸ்ரீதேவி பூதேவி நீலாதேவி சமேத மகாவிஷ்ணுவே நம:'

அந்தத் திருமாலை கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். பற்று வந்தால் தான் பிடித்துக் கொள்வார்கள். பகவத் பக்தி உள்ளவனை மகான்களுக்குப் பிடித்துவிடும் என்று சொல்லி அமைகிறேன்.

(13–06–2010 ஞாயிறு அருளுரையிலிருந்து)

– ஞானச்சேரி ஞானிகள் –

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## ஞானிகளின் பொன்மொழிகள்...

- இறைவன் இருக்கிறான். அவனுடன் கலப்பது என்பது ஒரு கொள்கை. ஐந்து பூதங்களிலும் சக்தியின் வடிவாய் பரவி இருப்பதால் இறைவன் என அழைத்தனர். சிந்தனை யோசனை செய்பவர் களுக்குத்தான் பஞ்ச பூதங்களைப் பற்றி போதிக்கப் படும்.
- நாம் உணரக்கூடிய உருவத்தை கடவுள் எடுக்கிறான். அவனுடன் சேரலாம் என்பது அத்வைதம். அவனுடன் சேராமல் தரிசனம் செய்து பார்த்துக்கொண்டே ஆனந்திக்கலாம் என்பது விசிஷ்டாத்வைதம்.
- உயிர் என்பது அழியாத தத்துவம். அதற்கு ஆண் பெண் பேதம் கிடையாது. மூலம் உயிர் என்பதனால் ஆண்டவனை உணரமுடிகிறது.
- உண்மைகளுக்கு தத்துவம் என்றொரு பெயர். இதை உணராத மனிதன் தான் தத்துவங்கள் வேறு என்றான். தத்துவங்கள் என்பது விளக்கங்கள்.
- கடவுளை மனிதன் எப்படி உணருவது அடைவது என்பதை சிந்தனையாளர்கள் விதவிதமாய் பிரித்தார்கள்.
- படைப்புகளை படைத்த இறைவன் அவற்றிற்கு அப்பால் இருக்கிறான். அங்கிருந்து ஆட்சி செய்கிறான். படைப்புகளுக்குத்தான் பிறப்பும் இறப்பும்.
- கண்ணுக்குத் தெரியாத பொருள்களைத் தெரிந்து கொள்வதவதற்குத்தான் பெயர்கள் ஏற்பட்டன.
- இந்து மதத்திற்கு தொய்வு ஏற்படுமானால் தன் கொள்கையை வித்திட மடங்களை ஏற்படுத்தினார் ஆதிசங்கரர். மதத்தை பரப்புவதற்காக அல்ல.
- அனுபவிப்பதற்காகத் தான் கொள்கைகள் பிறப்பிக்கப் பட்டன.
- மதம் மதத்திற்குரிய சிந்தனைகள் எல்லாம் ஆண்டவன் படைத்தான்.
- படைத்த பொருளை உருவங்களை கடவுளாக எண்ணி னால் அதற்கு அப்பால் இருக்கின்ற உண்மை களை மூளை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு போய்விடுகிறது என்பதனால் உருவங்களை எடுத்துவிடு என்றது இஸ்லாம்.



ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# குரு பெயர்ச்சி பலன்களும் பரிகார கோயில்களும்



வாக்கிய பஞ்சாங்கத்தின் படி வரும் விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 18ம் தேதி வியாழன் அன்று இரவு 10:00 மணிக்கு ஆங்கிலம் தேதி 4.10.2018 குரு பகவான் துலாம் இராசியில் இருந்து விருச்சிகம் இராசிக்கு இடம்பெயர்கிறார். இதனால் எந்த ராசிக்காரர்களுக்கு அதிக பலன் கள்? ஒவ்வொரு ராசிக்கும் குரு பெயர்ச்சிக்கான மதிப் பெண்கள் எவ்வளவு என்று பார்ப்போம் வாருங்கள்.

### குரு பெயர்ச்சியினால் மிக அதிகமான அளவு அதிர்ஷ்டம் பெறக்கூடிய ராசிகள்:

ரிஷபம், கடகம், துலாம், மகரம், மீனம். ஆகிய ராசிகாரர்களுக்கு அதிர்ஷ்டம் அதிகம் உள்ளது. இந்த ராசிகாரர்களுக்கு நீண்ட நாள் தடைபட்ட திருமணம் நடக்கும், புத்திர பாக்கியம் உண் டாகும், எடுத்த முயற்சியில் வெற்றி, தொழிலில் லாபம், பணி யில் முன்னேற்றம், குடும்பத்தில் மகிழ்ச்சி இப்படி பல நன்மைகள் உண்டாகும்.

### கொஞ்சம் குறைவான அதிர்ஷ்டம் பெறக்கூடிய ராசிகள்:

மேஷம், மிதுனம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு, கும்பம் ஆகிய ராசி காரர்களுக்கு இந்த குரு பெயர்ச்சியினால் 50 சதவீதத்திற்கு பலன்கள் உண்டு. கோயிலிற்கு சென்று குரு பகவானை வழிபடுவதால் அதிஷ்டம் மேலும் பெருகும். இந்த ராசிக்காரர்களுக்கு குறைந்த அளவே பலன்உள்ளது என்றாலும் வருத்தப்பட தேவை இல்லை. எல்லாம் வல்ல இறைவன் எல்லோருக்கும் அருள் புரிய தான் செய்வார். உங்களால் முடிந்தவரை இறை வனை வழிபடுங்கள். அவர்கள் உங்களுக்கு அனைத்தையும் தருவார்.

### ராசியும் குரு பெயர்ச்சியின் மதிப்பெண்களும்:

ராசி மதிப்பெண் மேஷம் 55 ரிஷபம் 75 மிதுனம் 45 கடகம் 85 சிம்மம் 45 கன்னி 45 துலாம் 80 விருச்சகம் 55 தனுசு 40 மகரம் 85 கும்பம் 65 மீனம் 85 இவைகள் அனைத்துமே குரு பெயர்சியின் சதவீதமே குரு உங்கள் ஜாதகத்தில் 20 சதவீதம் மட்டும் தான் ஆட்சி செய்வார் மீதம் உள்ள கிரகங்களின் அடிபடையில் உங்கள் சுய ஜாதகம் படி தான் வேலை செய்யும்.

குரு பார்க்க கோடி நன்மை என்பார்கள். எனவே நன்மைகள் நம்மை நாடி வர, நாம் அருகிலிருக்கும் ஆலயத்தில் உள்ள குருவை வழிபாடு செய்து பதினாறும் செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ்வோம்.

### குருவிற்குரிய வழிபாட்டு தலங்கள்

#### திருச்செந்தூர்:

குரு பீடமென்று அழைக்கப்படுகிறது. ஆறு படை வீடுகளில் இதுவும் ஒன்று. கடலோரத்தில் அமைந்த இந்த ஆலயத்தில் உள்ள முருகப் பெருமானையும், குரு பகவானையும் வழிபடுவது நல்லது.

#### தென்குடி திட்டை:

கும்பகோணத்தில் இருந்து தஞ்சை செல்லும் வழியில் உள்ளது. இங்குள்ள குரு, ராஜயோக குருவாக தனிச்சன்னிதியில் காட்சி அளிக்கிறார்.

#### பட்டமங்கலம்:

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இக்கோவி லில், குரு பகவான் கார்த்திகைப் பெண்களுக்கு உபதேசித்த கோலத்தோடு காட்சி தருகிறார்.

#### திருவாலிதாயம்:

சென்னையை அடுத்த பாடி, முகப்பேறு அருகில் உள்ளது. இங்குள்ள குரு சிறப்பு வாய்ந்தவராக கருதப்படுகிறார்.

#### குருவித்துறை:

மதுரை மாவட்டம், சோழவந்தானுக்கு அருகில் உள்ளது. இங்குள்ள பெருமாள் கோவிலில் சிறப்பாக காட்சி தருகிறார் குருபகவான்.

#### தக்கோலம்:

அரக்கோணத்தில் இருந்து காஞ்சீ புரம் செல்லும் வழியில் உள்ளது. இங்குள்ள தட்சிணா மூர்த்தி கலைநயத்தோடு காணப்படுகிறார்.

#### ஆலங்குடி:

திருவாரூர் மாவட்டத்திலுள்ள ஆலங்குடியில் தெற்கு நோக்கி வீற்றிருந்து தனி சன்னிதியில் குரு பகவான் அருள்பாலிக்கிறார்.

#### கோயம்புத்தூர்:

கோயம்புத்தூரிலிருந்து 20 கி.மீ.தொலைவில் கோவில் பாளையம் காலகாலேஸ்வரர் திருக் கோயிலில் மிகப்பெரிய தட்சிணாமூர்த்தி அருள்பாலிக்கிறார்.



# சுரங்கவழியில் சென்று முருகன் திருவடியில் ஐக்கியமான போகர்

பழனி மலைக்கோவில் தென்மேற்கு மூலையில் போகரின் சன்னிதி உள்ளது. இங்குதான் போகர் ஜீவ சமாதி ஆனார். போகர் தன் இஷ்ட தெய்வமாக வழிபட்ட ஸ்ரீ புவனேஸ்வரி அம்மனும், ஈஸ்வர சொரூபமான மரகத லிங்கமும் இங்கு இன்றும் பூஜையில் உள்ளன. இச்சன்னிதியில் இருந்து தண்டாயுதபாணி சுவாமியின் திருவடி நிலைக்கு ஒரு சுரங்கவழி உள்ளது. கடைசியாக அதனுள் சென்ற போகர், திரும்பாமல் அதனுள் முருகப்பெருமானின் திருவடியில் ஐக்கியமானதாக வரலாறு குறிப்பிடுகிறது. தற்போது இந்த சுரங்கவழி பயன்பாட்டில் இல்லை.

**சேலம்:**

சேலம் காயநிர்மாலேஸ்வரர் கோயிலில்சனகர், சனாதனர், சனந்தனர், சனத்குமாரர் ஆகிய நான்கு சீடர்களுடன் அருளும் தெட்சிணா மூர்த்தி, இக்கோயிலில் ஆறு சீடர்களுடன் காட்சி தருகிறார். இவர் கோஷ்டத்தில் தனிச் சன்னதியில் இருக்கிறார். தனி விமானமும் உள்ளது. நந்தியின் மீது அமர்ந்த கோலத்தில் இருக்கும் இவருக்கு அருகே இந்த 6 சீடர்களும் உபதேசம் பெறும் கோலத்தில் அமர்ந்திருக்கின்றனர். இவர்களில் 3 பேர் அமைதியாகவும், மற்ற 3 பேர் தங்களது சந்தேகங்களை கேட்டு அதற்கு விளக்கம் பெறும் விதமாகவும் இருக்கின்றனர். தெட்சிணாமூர்த்தியின் இக்கோலம் மிகவும் விசேஷமானதாகும்.

**திருச்சி:**

மலைக்கோட்டை தாயுமான சுவாமிகோயிலில் இருக்கும்தட்சிணாமூர்த்தி, தர்ப்பாசனத்தில் அமர்ந்து, சனகர், சனந்தகர், சனாதனர், சனத் குமாரர், சிவயோகமுனி, பதஞ்சலி, வியாக்ரமர், திருமூலர் என எட்டு முனிவர்களுக்கும் அருள் புரியும் கோலம் மிகச் சிறப்பான ஒன்றாகும்.

**காண்பதற்கரிய தெட்சிணாமூர்த்தி:**

வழக்கமாக சனகர், சனாதனர், சனந்தனர், சனத்குமாரர் என நான்கு சீடர்களுடன்தான் தெட்சிணாமூர்த்தி காட்சி தருவார். மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகிலுள்ள திடியன் கைலாசநாதர் கோயிலில் இவர் 14 சீடர்களுடன் காட்சி தருகிறார். சிவனின் குரு வடிவமான தெட்சிணாமூர்த்தியிடம் ஆங்கீரசர், அத்திரி, காஷ்யபர், பிருகு, கவுதமர், பரத்வாஜர், விஸ் வாமித்திரர், புலஸ்தியர், மரீசி, ஜமதக்னி, வசிஷ்டர், பார்கவர், மார்க்கண்டேயர், நாரதர் ஆகியோர் உபதேசம் பெற்றனர். இவர்கள் பதினான்கு பேரும் அவரிடம் உபதேசம் பெற்ற கோலத்தில் உள்ளனர். இத்தகைய அமைப்பில் தெட்சிணாமூர்த்தியின் அமைப்பை காண்பது மிகவும் அரிது. மலையடிவாரத்தில் அமைந்த இக்கோயிலில், தெட்சிணாமூர்த்தி நந்தி மீது அமர்ந்திருப்பது மற்றொரு சிறப்பு. இவரிடம் வேண்டிக்கொள்ள கல்வி, கலைகளில் சிறப்பிடம் பெறலாம் என்பது நம்பிக்கை. இக்கோயிலுக்கு அருகிலேயே ருக்மணி, சத்யபாமாவுடன் கிருஷ்ணர் கோயிலும், மலைக்கு மேலே தங்கமலை ராமர் கோயிலும் உள்ளது. போன்: 97919 94805

தினமும் சிவன் ஆலயத்தில் இருக்கும் நவகிரக குருவிற்கு நெய் விளக்கு தீபம் ஏற்ற வேண்டும். ‘ஓம் ‘குருப்யோ நமஹ’ என்ற மந்திரத்தை தினமும் குளித்த பிறகு 11 முறை சொல்லவும். அதே போல் “ஓம் வ்ருஷபத்ஜாய வித்மஹே க்ருணி ஹஸ்தாய தீமஹி தந்நோ குரு ப்ரசோதயாத்!” என்ற மந்திரத்தையும் தினமும் 11 முறை சொல்லலாம். எந்தப் பரிகாரத்தையும் ஆத்மார்த்தமாக செய்வதன் மூலம் குருவின் அருளைப் முழுவதுமாக பெறலாம்.

குருப்ரம்ஹோ குருவிஷ்ணு குரு தேவோ  
மஹேஸ்வரஹா குரு சாட்சாத் பரப்ரம்ஹா  
தஸ்மை ஸ்ரீகுருவே நமஹா குருவே  
சர்வலோஹானாம் பீஷஷே பவரோஹினாம்  
நிதயே சர்வ வித்யானம்  
தட்ஷினா மூர்த்தியே நமஹ  
(குணமிகு வியாழ குருபகவானே மணமுடன்  
வாழ மகிழ்வுடன் அருள்வாய் பிரஹஸ்பதி  
வியாழப் பரகுரு தேவா கிரகதோஷமின்றி  
காட்சித் தருள்வாய்)

**குரு பகவான் சில விவரங்கள்:**

- குருபகவானின் தேவகுரு பிரகஸ்பதி.
- அசுரகுரு சுக்ராச்சாரியார்.
- பூஜை செய்ய உகந்த மலர் முல்லை.
- ஹோமம் செய்ய அரச மர குச்சிகள், பசு நெய்.
- தானியம் கொண்டைக்கடலை.
- வாகனம் யானை.
- அதிதேவதை பிரம்மா
- நவரத்தினம் புஷ்பராகம்
- உலோகம் தங்கம்
- வஸ்திர நிறம் மஞ்சள்
- நிவேதனம் வெண் பொங்கல்.




மு.கிருஷ்ணமோகன்  
ஸ்ரீ காலபைரவி  
ஜோதிட நிலையம்  
தொ.பே.எண்:  
08526223399 / 09843096462


**வாசகர்களுக்கு வேண்டுகோள்...**

ஜோதிடர் கிருஷ்ணமோகன் எழுதும் தமிழ் மாதப் பலன்கள் ஆன்மிகமலர்.காம் இணையதளத்தில் பலன்கள் பகுதியில் படித்து பயன்பெறலாம்

# மாத பௌர்ணமியும் சிவபூஜையும்



மாத பவுர்ணமிகளில் கீழே குறிப்பிடப்படு வனவற்றால் சிவ பூஜை செய்தால் அனைத்து விருப்பங்களையும் அடைந்து, சிவசாயுஜ்யம் அடையலாம்.

சித்திரை ......................மரிக்கொழுந்து,  
வைகாசி ..............................சந்தனம்,  
ஆனி .............................. முக்கனிகள்,  
ஆடி ..........................................பால்,  
ஆவணி ...................நாட்டுச் சர்க்கரை,  
புரட்டாசி ...............................அப்பம்,  
ஐப்பசி ....................................அன்னம்,  
கார்த்திகை .......................... தீபவரிசை,  
மார்கழி ........................................ நெய்,  
தை ............................. கருப்பஞ்சாறு,  
மாசி.......... நெய்யில் நனைத்த கம்பளம்,  
பங்குனி .........................கெட்டித் தயிர்.

# முன்னோர் ஆசிவழங்கும்
# மகாளய அமாவாசை

## விரதம் கடைபிடிக்கும் முறையும், பலனும்

மகாளயம் என்றால் கூட்டமாக வருதல் என்று பொருள்.

பட்சம் என்றால் பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பட்சம் ஆகும்.

மறைந்த நம் முன்னோர்கள் மொத்தமாக பதினைந்து நாட்கள் மேலுலகில் இருந்து பூமிக்கு வந்து 15 நாட்கள் (சில சமயம் 16ஆக மாறுபடும்) நம்மோடு தங்கிச் செல்லும் காலமே மகாளயபட்சம் ஆகும்.

இது புரட்டாசி மாதத்து பௌர்ணமி திதிக்கு மறுநாள் பிரதமை திதியில் துவங்கி அமாவாசை வரை நீடிக்கும்.

புரட்டாசி மாதத்தில் வரும் அமாவாசை மகாளய அமாவாசை எனப்படும்.

தை அமாவாசை ஆடி அமாவாசை இவைகளை விட உயர்ந்தது மகாளய அமாவாசை.

மறந்து போனவனுக்கு மகாளயபட்சம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். (அதாவது முன்னோர்களுக்கு ஒரு வருடமாக ஸ்ரார்த்தம் (திதி) கொடுக்காமல் மறந்து இருந்தால் கொடுக்க மறந்தவர்கள் மகாளய அமாவாசையன்று கொடுத்தால் அந்த ஒரு வருட ஸ்ரார்த்தம் (திதி) கொடுத்த பலன் வந்து சேரும்.

### மகாளயபட்ச காலத்தில் என்னென்ன செய்ய வேண்டும்:

மற்ற மாதங்களில் அமாவாசையன்று தர்ப்பணம் செய்ய வேண்டும். நம் முன்னோர்கள் மறைந்த திதியன்று ஸ்ரார்த்தம் (திவசம்) செய்வோம்.

ஆனால் மகாளயபட்ச காலத்தில் பிரதமை திதி துவங்கி அமாவாசை வரை தினமும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

ஒட்டு மொத்த முன்னோர்களையும் அப்போது நினைவு கூற வேண்டும்.

புண்ணிய தீர்த்தங்களுக்கு சென்று புனித நீராடி நம் முன்னோர்களின் ஆத்ம சாந்திக்காக







ப்ரார்த்தனை செய்து வர வேண்டும்.

அந்தணர்களுக்கு வஸ்திரதானம்

ஏழைகளுக்கு அன்னதானம்

படிக்க சிரமப்படும் (பொருளாதார நிலையில்) மாணவர்களுக்கு வித்யாதானம்

இவைகளை அவரவர் சக்திக்கு தகுந்தவாறு அளிக்க வேண்டும்.

நமது தேசத்தின் பல நூற்றாண்டுகளுக்கும் முந்தைய வரலாறை கூட தெரிந்து வைத்திருக்கும் பலர் தங்களின் மூதாதையர்கள் (முன்னோர்கள்) மூன்று தலைமுறைகளுக்கு முன்பு உள்ளவர்கள் (பித்ருக்கள்) பெயரை நினைவில் வைத்திருப்பதில்லை.

அந்த பயிற்சியை இந்த காலத்தில் நமது குழந்தைகளுக்கு நாம் சொல்லி கொடுக்க வேண்டும்.

தற்போது நினைவில் உள்ள தலைமுறையினர்களின் பெயரை டைரியில் குறிக்கச் சொல்ல வேண்டும்.

அப்படி செய்தால்தான் எதிர்காலத்தில் வரும் சந்ததியினருக்கு தர்ப்பணம் ; ஸ்ரார்த்தம் குறித்த அறிவு நம்மிடையே நீடித்து நிலைத்திருக்கும்.

தலைமுறைக்கே லாபம்:

மகாளயபட்சத்தின் ஒவ்வொரு திதியிலும் தர்ப்பணம் கொடுப்பதால் கிடைக்கும் பலன்கள்

**முதல் நாள்:**
பிரதமை திதி பணம் சேரும்

**இரண்டாம்நாள்:**
துவிதியை திதி ஒழுக்கமான குழந்தைகள் பிறக்கும்

**மூன்றாம் நாள்:**
திரிதியை திதி நினைத்தது நிறைவேறும்

**நான்காம் நாள்:**
சதுர்த்தி திதி பகை விலகும்

**ஐந்தாம் நாள்:**
பஞ்சமி திதி வீடு நிலம் சொத்து வாங்கும் யோகம் கூடும்

**ஆறாம் நாள்:**
ஷஷ்டி திதி புகழ் கிடைக்கும்

**ஏழாம் நாள்:**
ஸப்தமி திதி சிறந்த பதவி கிடைக்கும்

**எட்டாம் நாள்:**
அஷ்டமி திதி அறிவு ஞானம் கிடைக்கும்

**ஒன்பதாம் நாள்:**
நவமி திதி சிறந்த வாழ்க்கை துணை கிடைக்கும்

**பத்தாம் நாள்:**
தசமி திதி நீண்டநாள் ஆசை நிறைவேறும்

**பதினோராம் நாள்:**
ஏகாதசி திதி படிப்பு கலை வளரும்

**பனிரெண்டாம் நாள்:**
துவாதசி திதி தங்க ஆபரணங்கள் சேரும்

**பதிமூன்றாம் நாள்:**
திரயோதசி திதி
தீர்க்காயுள் ஆரோக்யம்
தொழில் அபிவிருத்தி



கிடைத்தல்

**பதினான்காம் நாள்:**

சதுர்த்தசி திதி பாவம் நீங்கி எதிர்கால தலைமுறைக்கு நன்மை

**பதினைந்தாம் நாள்:**

மகாளயஅமாவாசை மேலே சொன்ன அத்தனை பலன்களும் நம்மை வந்து சேர நம் முன்னோர்கள் ஆசி வழங்குவார்கள்

### மகாளயபட்ச விதிமுறைகள்:

மகாளயபட்ச ( மேலே சொன்ன 15 தினங்கள்) காலத்தில் கண்டிப்பாக வெங்காயம் சேர்க்க கூடாது, எண்ணெய் ஸ்நானம் செய்யக்கூடாது, முகச்சவரம் செய்யக்கூடாது, தாம்பத்யம் (உடலுறவு) கூடாது, புலனடக்கம் மிக மிக அவசியம், மகாளயபட்சத்து (பதினைந்து நாட்களில்) தினங்களில் கண்டிப்பாக வெளியே சாப்பிடக் கூடாது

2018ம் வருடத்தில் செப்டம்பர் மாதத்தில் மேற்சொன்ன மகாளய அமாவாசை வருகிறது. இந்த அமாவாசைக்கு செப்டம்பர் 25ம் தேதி முதல் திதி ஆரம்பமாகும். அந்த திதிகளின் பெயர்களும் நாட்களையும் தெளிவாக கொடுத்துள்ளோம்.

**செப்டம்பர்**

| | | |
|---|---|---|
| 25.9.2018 | செவ்வாய் | ப்ரதமை |
| 26.9.2018 | புதன் | த்விதீயை |
| 27.9.2018 | வியாழன் | த்ருதீயை |
| 28.9.2018 | வெள்ளி | சதுர்த்தி |
| 29.9.2018 | சனி | பஞ்சமி |
| 30.9.2018 | ஞாயிறு | ஷஷ்டி |

**அக்டோபர்**

| | | |
|---|---|---|
| 01.10.2018 | திங்கள் | ஸப்தமி |
| 02.10.2018 | செவ்வாய் | அஷ்டமி |
| 03.10.2018 | புதன் | நவமி |
| 04.10.2018 | வியாழன் | தசமி |
| 05.10.2018 | வெள்ளி | ஏகாதசி |
| 06.10.2018 | சனி | த்வாதசி |
| 07.10.2018 | ஞாயிறு | சதுர்தசி |

**08.10.2018 திங்கள்**

**மஹாளயஅமாவாஸை**



www.aanmeegamalar.com

# ராசிக்குரிய சிவஸ்தலங்கள்



சிவபெருமானுக்கு உகந்த விரதங்களில் ஒன்று மகாசிவராத்திரி. ஒவ்வோரு ஆண்டும் மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசியன்று மகாசிவராத்திரி கொண்டாடப்படுகிறது. சிவபெருமான் லிங்கத் தில் அருள்பாலிக்கத் தொடங்கியதும், பிரம்மா, விஷ்ணு இருவரும் சிவபெருமானின் அடிமுடி தேடியதும், தேவ அசுரர்கள் பாற்கடலைக் கடைந்தபோது வெளிப் பட்ட ஆலகால விஷத்தை அருந்தி சிவபெருமான் உலகைக் காப்பாற்றியதும் இந்த நாளில்தான். மகாசிவராத்திரி அன்று விரதம் இருந்து சிவபெருமானை வழிபடவேண்டும். எந்த ராசியினருக்கு எங்கு சென்று வழிபட்டால் சிவனின் முழு அருளைப் பெறலாம் என்பதைக் காண்போம்:

**மேஷம்**

மலை மேல் அமர்ந்த சிவனை வழிபடுவது நல்லது. குறிப்பாக திருவண்ணாமலை சென்று வழிபடலாம். அருகில் இருக்கும் சிவாலயத்துக்குச் சென்றும் பூஜைப் பொருட்களுடன் வெல்லம் கலந்த நீரை வைத்து வணங்கலாம்.

**ரிஷபம்**

திருவானைக்காவல், கங்கைகொண்ட சோழபுரம், திருவாரூர் ஆகிய ஊர்களிலுள்ள சிவாலயங்களுக்குச் சென்று வழிபடலாம். அருகில் இருக்கும் சிவாலயத்துக்குச் சென்றும் பூஜைப்பொருட்களுடன் தயிர் கலந்த நீரை வைத்துப் படைத்து பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லி வணங்கலாம்.

**மிதுனம்**

திருச்செங்கோடு, சிதம்பரம், காளஹஸ்தி ஆகிய இடங்களுக்குச் சென்று வரலாம். சிவாலயத்துக்குச் சென்றும் பூஜைப் பொருட்களுடன் கரும்புச்சாறு வைத்துப் படைத்து பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லி வணங்கலாம்.

**கடகம்**

திருக்கடையூர்,திருவானைக்காவல்,வேலு}ர் ஜலகண்டேஸ்வரர் கோயிலுக்குச சென்று வழிபடலாம். அருகிலுள்ள சிவாலயத்துக்குச் சென்றும் பூஜைப்பொருட்களுடன் சர்க்கரைக் கலந்த பால் வைத்துப் படைத்து வணங்கலாம்.

**சிம்மம்**

சிதம்பரம், திருவண்ணாமலை சென்று வழிபடலாம். அருகிலுள்ள சிவாலயத்துக்குச் சென்றும் சிவப்புச் சந்தனம் கலந்த பாலால் அபிஷேகம் செய்து பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லி வணங்கலாம்.

**கன்னி**

காஞ்சி ஏகாம்பரேஸ்வரர், மதுரை மீனாட்சி சொக்கநாதரை வழிபடலாம்.

**துலாம்**

சிதம்பரம், காளஹஸ்தி, மதுரை மீனாட்சி சொக்கநாதர் கோயில் சென்று தரிசிப்பது மிகுந்த பலனைத் தரும். அருகிலுள்ள சிவாலயத்துக்குச் சென்றும் பாலாபிஷேகம் செய்து வணங்கலாம். செல்வச்செழிப்பு மிகும்.

**விருச்சிகம்**

திருவானைக்காவல், வேலு}ர் ஜலகண்டேஸ்வரர் கோயிலுக்குச் சென்று வழிபடலாம்.

**தனுசு**

திருப்பரங்குன்றம், திருவண்ணாமலை சென்று வழிபடுவது நல்லது.

**மகரம்**

காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்குச் சென்று வழிபட்டால் சிறப்பான பலன்களை அடையலாம்.

**கும்பம்**

சிதம்பரம், காளஹஸ்தி ஆகிய சிவதலங்களுக்குச் சென்று வழிபட்டால், உற்சாகம் தரும் செய்திகள் உங்களை வந்தடையும்.

**மீனம்**

வேதாரண்யம், ஜலகண்டேஸ்வரர் கோயில், திருவானைக்காவல் சென்று வழிபட்டால் சிறப்பான பலனைப் பெறலாம். உங்களுக்கு அருகில் உள்ள சிவாலயத்துக்குச் சென்றும் பாலில் குங்குமப்பூ கலந்து அபிஷேகம் செய்து வணங்கலாம். செல்வச்செழிப்பு மிகும்.





www.aanmeegamalar.com



# சனீஸ்வரன் தீர்ப்பு

வாழ்விலே இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். அதை அமல்படுத்தும் அதிகாரம் நீதிதேவன் சனீஸ்வரன் கையில் தான் உள்ளது. நீதிபதி எப்படி குற்றவாளியை தண்டிக்கிறாரோ, அதே போல முற்பிறவியில் செய்த கர்மத்திற்கு இப்பிறவியில் கோச்சாரம் லக்கினம் பார்த்து தண்டனையை சனீஸ்வரன் கஷ்டமாகக் கொடுக்கிறார்.

“தகப்பன் செய்த பாவம் பிள்ளையை பிடிக்கும்” என்பார்கள். அந்த வகையிலும் சனீஸ்வரன் தீர்ப்பு வழங்குவார். பொதுவாக கஷ்டம் நீங்க கோயிலுக்குச் சென்று தெய்வ வழிபாடு செய்வது வழக்கம். மனிதரில் நல்லவர், கெட்டவர் என்று இருப்பதைப்போல தெய்வத்தில் நல்லது கெட்டது என்று பாகுபாடு கிடையாது. அப்படி தரம் பிரிப்பது ஆகமத்திற்கு புறம்பானது. அறிவியலுக்கும் ஏற்புடையதல்ல.

ஒருவர் செய்யும் பாவ காரியத்துக்கு கஷ்டம் வரும். கஷ்டம் நீங்க சனீஸ்வரனை வழிப்பட்டால் உடனடியாக கஷ்டத்தை நீக்கிவிடமாட்டார் அதைத் தாங்கிக் கொள்ளும் மனோதிடத்தைத் தருவார் குறிப்பிட்ட காலம் வந்ததும் சுபிட்சம் தருவார் இது தான் வாழ்வியலின் தத்துவம்.

அந்த வகையில் சனிப்பெயர்ச்சியிலும் சாதகமும், பாதகமும் அவரவர் ராசிப்படி அமையும் பாதிப்பு வரும் ராசிக்காரர்கள் சனீஸ்வரனை வழிபட்டு “வருமுன காக்கும்”தெளிவினைப் பெறவேண்டும்

# கிருஷ்ணன் பிறப்பை மறைத்த கழுதை

கம்சன் தன் தங்கை தேவகிக்கு பிறக்கும் எட்டாவது குழந்தையால் தன் உயிருக்கு ஆபத்து என தெரிந்தவுடன் கணவன், மனைவி இருவரையும் சிறையில் அடைத்தான்... இவர்களுக்கு குழந்தை பிறக்கும் சமயம், ஒரு கழுதையை சிறை வாசலில் கட்டி வைத்தான். சிறைக்காவலர்களை அவன் நம்பவில்லை. கழுதைக்கு நுகரும் சக்தி மிக அதிகம்..குழந்தை பிறந்ததும் கத்த துவங்கி விடும். கம்சன் வந்து கொன்று விடுவான். இப்படி ஏழு குழந்தைகள் இறந்தன..

எட்டாவது குழந்தையாக கிருஷ்ணர் பிறக்கிறார். உடனே தேவகி கணவன் வசுதேவன்... “தயவு செய்து கத்தி விடாதே” என கழுதை காலில் விழுந்து கெஞ்சினான். கழுதையும் கத்தவில்லை. கிருஷ்ணர் அவதாரம் நிகழ்ந்தது, எனவேதான் “காரியம் ஆகனும்னா கழுதையானாலும் காலை பிடி” என்ற பழமொழி வந்தது.!!



கர்நாடகாவில் அமிர்தாபுரத்து அமிர் தேஷ்வரான கோவிலில் வெளிச்சுவரில் வசுதேவர் கழுதை காலில் விழும் சிற்பம் உள்ளது.





# இதயநோய், நரம்புத்தளர்ச்சி, சுறுசுறுப்பு, பயம் போன்றவற்றை போக்கும் தீமிதி திருவிழா

உடம்பில் ஏற்படும் அனைத்து வியாதிகளையும் குணப்படுத்தும் ஆற்றல் கால் பாதத்தில் உள்ளது. வெறும் காலுடன் கோவிலுக்கு போவதற்கு இதுதான் காரணம் தெருக்களில் இருக்கும் சின்னசிறு கல்லுகள், மணல்கள் பாதங்களில் உள்ள நாடி நரம்புகளில் குத்துவதால் இயற்கையாகவே பல வியாதிகள் மனிதர்களை அண்டாமல் தடுக்கும், ஏற்கனவே உடலில் இருக்கும் வியாதிகளும் சரியாக ஒரு தூண்டுதலாக அமையும்.

இதுதான் சீனாவில் அக்கு பைன்ஞ்சர் எனும் ஊசி, முள் போன்றவற்றால் குத்தும் வைத்திய முறை இன்றளவும் கடைபிடிக்கப்படுகிறது.

அந்த வகையில், அதைவிட அற்புத பலனைத் தரும் வைத்திய முறைதான் தீ மிதித்தல் விழாவா கும். தீ மிதிப்பதால் ஏற்படும் சூடு உச்சம் தலைக்கு ஏறும் இதனால் இதயம் ஆரோக்கியம் அடைகின்றது, மன பயம் அழிகின்றது, துணிச்சல் பிறக்கின்றது. பல நோய்கள் குணமடைகினறது.

நரம்புத்தளர்ச்சி (பலவீனமான நரம்புகள் சுறுசுறுப்புடன் இயங்கவும்), இரத்த அழுத்தங்கள் குறையும், ஹார்ட் அட்டாக் வராது, பயத்தினால் ஏற்படும் இதய துடிப்பு பிரச்சனை வராது, பயத்தை போக்கும்.



உடம்பில் அரைவாசி நோய்களுக்கு காரணம் பயம் அந்த பயத்தை இந்த தீ மிதிக்கும் முயச்சி போகச்செய்யும்.

இதனால்தான் நம் முன்னோர் தீ மிதித்தலை இறைவனோடு சம்பந்தப்படுத்தி ‘கோவல்களில் தீ மிதிக்கும் திரு விழா’வாக கொண்டாடினர்.

அக்காலத்தில் கிராமங்களில் நோய்கள் பரவும் சமயத்தில் அம்மனுக்கு தீமிதி திருவிழாக்கள் நடத்தி அம்மனை வழிபடுவதன் ரகசியமும் இதுதான்.

– ஷ்யாம் சுந்தர், சென்னை.



# உணவு தண்ணீர் இல்லாமல் வாழ வைக்கும் மூலிகை

# மனதையும், சுவாசத்தையும் கட்டுப்படுத்தும் யோகசித்தி

வெளிநாட்டுக்காரன் சிந்தனைக்கும், நம்ம ஊர் சிந்தனைக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. நாம் அமெரிக்கா, ஐரோப்பா, ரோமாபுரி, கிரேக்கம் என்றெல்லாம் சொல்கிறோமே அந்த நாடுகளில் அப்போது வாழ்ந்தவர்களும், இப்போது வாழ்கிறவர்களும் உலகத்து பொருட்களை பயன்படுத்தி எப்படியெல்லாம் உடல் சுகத்தை அனுபவிக்கலாம் என்று சிந்தித்தார்கள். அதற்காகவே இரவும் பகலும், ஓய்வு ஒழிச்சல் இன்றி செயல்பட்டும் வருகிறார்கள். ஆனால் இந்தியர்களாகிய நாம் எப்போதுமே அழியக்கூடிய பொருட்களால் கிடைக்கும் இன்பம் நிரந்தரம் இல்லாதது, அழியாத பேரின்ப நிலையை நித்தியமானது என்று நம்பி உலகத்தை கடந்து செல்ல முனைப்போடு செயல்படுகிறோம். இதனால் தான் இந்தியா நவீனத்துவம் பெருகிவிட்ட இக்காலகட்டத்தில் கூட இயற்கையோடு இணைந்த இன்பமான வாழ்வை முற்றிலும் இழக்காமல் அனுபவித்து வருகிறது.



சென்ற பதிவில் இறந்துபோன மனித உடலை பாதுகாத்து வைப்பதற்கு எகிப்தியர்கள் எப்படியெல்லாம் கவனம் செலுத்தினார்கள், அதற்காக உழைத்தார்கள், என்பதை கண்டோம். அதற்கான மூலகாரணம் அவர்களது உயிர், ஒருநாள் உடலைத்தேடி வரும் என்ற அவர்களது மத நம்பிக்கை தான் என்றாலும், அதற்குள் மிக ஆழமாக வேரூன்றி இருப்பது உடலின் மேல் உள்ள இச்சையே ஆகும். உடம்பு என்ற ஒன்று இருந்தால் தான் மது, மாது போன்ற சுக போகங்களை அனுபவிக்க முடியும். அதனால் உடம்பை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று அவர்கள் கருதினார்கள் சுக போகத்தை அனுபவிக்க மீண்டும் பூமிக்கு வருவோம் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

நமது மக்களும், உடலை விரும்பினார்கள், உடம்பை பாதுகாத்தார்கள், உடம்பிற்கு ஒரு சிறு கேடு கூட ஏற்படக்கூடாது என்று கண்ணும் கருத்துமாக இருந்தார்கள் என்பது உண்மை. ஆனால் நாம் உடம்பை பாதுகாக்க நினைத்தது சுகபோகங்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. உடம்பை பயன்படுத்தி மனதை கட்டி, கர்மாவை வெட்டி, ஆத்மாவை இறைவனின் பாதங்களுக்கு அழைத்துச்செல்ல வேண்டும் என்பதற்காக. உடம்பு இல்லை என்றால் தவம் செய்ய முடியாது. தவம் இல்லை என்றால் இறைவனை அடைய முடியாது. எனவே உடம்பை பாதுகாக்க வேண்டும் என்று நினைத்தார்களே தவிர உயிர் போனாலும் உடம்பை தேடி மீண்டும் அது வருமென்று அவர்கள் நினைக்கவில்லை. உயிர்கள் மீண்டும் பூமிக்கு வரவேண்டும் என்றும் அவர்கள் ஆசைப்படவில்லை மீண்டும் மீண்டும் கருவறையில் வருவது மாபெரும் துயரம் என்பது நம்மவர்களின் எண்ணம் எனவே தற்போது பெற்றிருக்கும் உணவை செம்மையாக பாதுகாத்து கொள்வதில் மட்டுமே மிக அதிகமான கவனம் செலுத்தப்பட்டது.

> **பசிதாகம் இல்லாமல் பல மணிநேரம் நம்மாலும் இருக்க முடியும் என்று கூறி ஒரு மூலிகை முறையை எனக்கு சொன்னார்**

நமது சித்தர்களும், ஞானிகளும் பலநூறு வருடங்கள் வாழ்ந்ததாக அறிகிறோம். முழுமையாக அறுபது ஆண்டுகள் கூட வாழமுடியாத நமக்கு நூறு வயதிலும் கரும்பை கடித்து மெல்லும் மனிதனை பற்றிய செய்தி கேட்டாலே அதிசயமாக இருக்கிறது. இந்த நிலையில் ஐநூறு, அறுநூறு ஆண்டுகள் வாழ்ந்த மனிதர்களை பார்த்தால் அரண்டு போய்விடுவோம். இந்த இடத்தில் ஒரு சிந்தனை நமக்கு வருகிறது. ஒரு மனிதனால் இத்தனை நூறு வருடங்கள் வாழ முடியுமா? அது சாத்தியமா? என்பதே அந்த சிந்தனையாகும். சித்தர்களின் வாழ்வை யோகநெறியின் முறையை மிக நுணுக்கமாக ஆராய்ந்து தெரிந்து கொண்டால் இதை பற்றிய ஐயம் நமக்கு வரவே வராது. எனக்கு ஆயிரம் வயது முடிந்தது என்று ஒரு மனிதன் நேரில் வந்து சொன்னால் கூட அப்படியா அதனால் என்ன? என்று தான் கேட்போமே தவிர ஆச்சரியப்படமாட்டோம்.

நூறு வயது வாழ்வது என்பது இருக்கட்டும். பலநாட்கள் உணவு என்பதே இல்லாமல் ஒரே இடத்தில் அமர்ந்து, ஆடாமல், அசையாமல் தவம் செய்யும் சித்தர்களை பற்றி கேள்விபட்டவுடன் பசியே இல்லாமல் எப்படி இருக்க முடியும்? என்று நமக்கு தோன்றுகிறது. இந்த கேள்விக்கான விடையை நாம் பெற்று விட்டால் மனிதர்களால் நூறு வருடமென்ன அதற்கு மேலும் வாழ முடியும். அழிந்து போகும் இந்த உடம்பை பயன்படுத்தி பல்லாண்டுகள் பாடுபட்டு முக்தி நிலையை அடைய முடியும் என்பது தெளிவாக தெரிந்து விடும். உணவு உண்ணாமல் இருப்பது பெரிய விஷயம் அல்ல. உணவு இல்லை என்றாலும், உணவு உண்டதனால் உடம்பு பெறுகின்ற சக்தியை உணவு இல்லாமலும் பெற்று இருப்பது தான் மிகமுக்கிய விசேஷம். அப்படி சித்தர்களால் எப்படி இருக்க முடிகிறது? நம்மாலும் இருக்க முடியுமா? என்ற கேள்வி ஆசையாக தோன்றுகிறது.

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் எனக்கும் அந்த கேள்வி உதித்தது. சித்தர்கள் உணவு, தண்ணீர் எதுவும் இல்லாமல் பல நாட்கள் இருப்பது போல நம்மாலும் இருக்க முடியுமா? அதற்கு என்ன வழி? என்று யோசித்து தேட ஆரம்பித்தேன். அப்போது தற்செயலாக

www.aanmeegamalar.com




ஒரு வயதான சித்த வைத்தியரை சந்தித்தேன். பொதுவாக வைத்தியர்கள் என்றாலே தான் கற்ற வித்தையை அது சரியானதோ, தவறானதோ மற்றவர்களுக்கு அவ்வளவு சீக்கிரம் கற்றுக் கொடுக்க மாட்டார்கள். தன்னால் மட்டும் தான் அப்படிப்பட்ட வித்தையை கற்றுக்கொள்ள முடியும் என்று ஜம்பம் பேசி அதை பற்றி வெளிப்படையாக பேசுவதை கூட தவிர்த்து விடுவார்கள். ஆனால் நான் சந்தித்த அந்த வைத்தியர் முதியவராக இருந்தாலும் பல முற்போக்கான கருத்துக்களை கொண்டவராக இருந்தார். அவர் பசிதாகம் இல்லாமல் பல மணிநேரம் நம்மாலும் இருக்க முடியும் என்று கூறி ஒரு மூலிகை முறையை எனக்கு சொன்னார்.

குளத்து தாமரையை பற்றி கேள்விபட்டிருக்கிறோம். கல் தாமரை என்று ஒன்று இருக்கிறது என்ற சங்கதி நம்மில் பலருக்கும் தெரியாது. எனக்கும் கூட அப்போது நிலைமை அப்படிதான். அந்த கல்தாமரையை கொண்டு வந்து சுத்தமான தண்ணீரில் பனிரெண்டு மணிநேரம் ஊறவைத்து குடித்துவிட்டால் அடுத்த பனிரெண்டு மணிநேரத்திற்கு பசியே எடுக்காது. தாகம் வராது. உடலில் சோர்வு என்பதே தெரியாது என்று சொன்னார். அதே நேரம் ஒருமணிநேரம் ஊற வைத்தால் ஒருமணி நேரம் பசிக்காது. இரண்டுமணி நேரம் வைத்தால் அந்த மணிநேரம் வரை பசி எடுக்காது. நீ எவ்வளவு நேரம் ஊற வைக்கிறாயோ அவ்வளவு நேரம் அது வீரியத்தை காட்டும் என்றார்.

கல் தாமரை எங்கே கிடைக்கும் என்று அவரிடம் கேட்டேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நாட்டு மருந்து கடைகளிலும் கிடைக்கும் என்று சொன்னார்.

உடனேயே என் பரிசோதனையை ஆரம்பித்து விட்டேன். நாட்டுமருந்து கடையில் கல்தாமரையை வாங்கினேன். தாமரை என்றவுடன் அது பூவை போல இருக்கும். ஒருவேளை பதப்படுத்தி சருகு போல இருக்கலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் இந்த கல்தாமரை காய்ந்து போன பாசிபோல் இருந்தது. அதை தண்ணீரில் போட்ட பத்தாவது நிமிடம் புத்தம் புதிதாக விரிந்து விட்டது. மலர்ச்சியாகவும் இருந்தது. பத்துமணி நேரம் ஊறவைத்து அதிகாலை நேரத்தில் குடித்து விட்டேன். உண்மையில் அன்றைய பகல் முழுவதும் எனக்கு பசி இல்லை. அதே நேரம் சாப்பிடாமல் இருக்கிறோமே என்ற எண்ணமும் இல்லை. சோர்வும் இல்லை. தாகமும் இல்லை. உண்மையில் அசந்து போய்விட்டேன் இருந்தாலும் எனக்கொரு சந்தேகம் இருந்தது. இதை ஊறவைத்து காத்திருக்க வேண்டுமே சித்தர்கள் அப்படி காத்திருப்பவர்களா? அல்லது அவர்களுக்காக வேறு யாராவது பதம் செய்து கொடுப்பார்களா? என்பது தான் எனது அடுத்த கேள்வி.

அந்த கேள்விக்கான பதிலை வேறொருவர் எனக்கு தீர்த்து வைத்தார் ஆவாரம் பூ இருக்கிறது அல்லவா! அந்த ஆவாரம்பூவையும் மூலிகை பரிபாஷையில் கறுப்பு என்று சொல்லபடுகிற ஒருவித போதை தருகின்ற இலையையும் ஒன்றாக சேர்த்து கசக்கி ஜர்தா புகையிலையை எப்படி உதடுகளுக்கு அடியில் வைத்துக் கொள்வார்களோ அப்படி இந்த பொருளை வைத்துக்கொண்டால் எத்தனை நாள் வேண்டுமானாலும் கூட பசிதாகம் இல்லாமல் ஆரோக்கியமாக இருக்கலாம் என்று சொன்னார். ஆனால் இந்த கலவையில் அனுபவம் இல்லாமல் செய்தால் மூளை பாதிப்பு போன்ற பின்விளைவுகளும் ஏற்படும் என்று எச்சரிக்கவும் செய்தார். ஒருவர் எச்சரித்த பிறகு அதை பரிசோதித்து பார்ப்பதற்கு நான் என்ன பித்தனா?

எது எப்படியோ? சில மணிநேரங்களாவது பசி இல்லாமல் இருக்கும் சித்தர் முறையை அறிந்து கொண்டோம் என்ற திருப்தி ஏற்பட்டது. இப்படி பசி மறப்பதற்கே வழிகளை வைத்த சித்தர்கள் நூறு வயதிற்கு மேலும் வாழ்வதற்கு என்ன வழி வைத்திருப்பார்கள்? என்பதை அறிந்து கொள்ள உங்களுக்கு ஆர்வம் இருக்கிறது அல்லவா? அதே ஆர்வம் எனக்கும் இருக்கிறது. அதனால் தான் மிக நுணுக்கமான விபரங்களை பல வருடங்கள் துருவித்துருவி என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. அதை இன்று மிகவும் மகிழ்ச்சியோடு உங்களோடு பகிர்ந்து கொள்ளவும் முடிகிறது. எகிப்தியர்கள் இறந்து போன உடலை பராமரிப்பதற்கு வழி கண்டுபிடித்ததை போல சித்தர்கள் உடல்கள் இறந்து போகாமல் இருக்க பல வழிகளை கண்டறிந்து கூறி உள்ளார்கள் அவற்றில் மிக முக்கியமானது காய சித்தி முறையாகும்.

மரணம் என்பது உடல், மனம், சுவாசம், நினைவுகள், பரிமாணங்கள் போன்ற ஐந்தையும் தனித்தனியாக பிரிக்கும் முறையே ஆகும். அப்படி மரணமானது எதையும் பிரிக்காமல் கட்டுடைக்காமல் இருக்க வேண்டுமானால் முதலில் உடலை அழிவில் இருந்து மீட்க வேண்டும். கப்பல் கட்டுவதற்கு, வீடு கட்டுவதற்கு, மாட்டுவண்டி கட்டுவதற்கு தனித்தனி தொழில்நுட்பங்கள் இருப்பது போல, உடம்பை அழியாமல் மீட்டு எடுப்பதற்கு சித்தர்கள் ஒரு தொழில்நுட்பத்தை கண்டார்கள் அதன் பெயர் தான் காயசித்தி.

உடலை காப்பதற்கு எப்படி காயசித்தியை உருவாக்கினார்களோ அதே போல மனதையும், சுவாசத்தையும் கட்டி காப்பதற்கு யோகசித்தி என்ற ஒரு முறையையும், நினைவுகளை நிர்மூலம் ஆக்குவதற்கு ஞானசித்தி என்ற ஒரு முறையையும், ஆத்மாவின் பரிணாம வளர்ச்சியை வளர்ப்பதற்கு சமாதிசித்தி என்ற ஒரு முறையையும் சித்தர்கள் கண்டுபிடித்தார்கள்.

ரகசியங்களை அறிந்து கொள்ளவேண்டும்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434



ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
aanmeegamalar.com
MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

www.aanmeegamalar.com






www.aanmeegamalar.com

# அனைத்து தெய்வமும் அடங்கும்

# ஸ்ரீசக்கரம்

## குலதெய்வம் தெரியாதவர்களுக்கு வரபிரசாதம்



இந்து சமயத்தில் வழிபாட்டு முறைகள் பல இருந்தாலும் யந்திர பூஜை மிகவும் சக்தி வாய்ந்தது. ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனியாக யந்திர வழிபாடும் உண்டு. இதன்படி பார்த்தால், கணபதி யந்திரம், முருகன் யந்திரம் போன்று யந்திர பூஜையின் பட்டியல் நீண்டுக் கொண்டே போகும் ஆனால் இந்த யந்திரங்களுக்கெல்லாம் தலையாயது ஸ்ரீ சக்ர யந்திரம், எனவே இதனை யந்திர ராஜம் என்றும் கூறுவார்கள்.

அதுபோல நமது சமய வழிபாடுகளில் அனைத்து மந்திரங்களுக்கும் ஸ்ரீ வித்யா மந்திரமே தலையாயது என்பதால் மந்திர ராஜம் எனும் இவ்வழிபாடு சிறப்பு பெறுகிறது.

சிதம்பரம் பொன்னம்பலத்தில் வீற்றி ருக்கும் நடராஜர 14 தடவை தனது டமருகத்தை அடித்து ஒலி எழுப்பினார் . முதலில் ஒன்பது தடவையும் பின்னர் ஐந்து தடவையும் மங்கள ஒலி எழுப்பினார்.

ஒன்பது என்பது தேவிக்குரிய நவாக்ஷாரி

ஐந்து என்பது சிவனுக் குரிய பஞ்சாட்சரம்

மேலும் தனது இடப் பாகத்தில் வீற்றிருக்கும் அன்னைக்குரிய இடது காலால் நடராஜர் அருள் பாலிக்கிறார்.



சக்திக்குரிய நவாக்ஷரி மந்திரத்தை முன்னிலைப்படுத்திய நடராஜர், அருள் பாலிப்பது சக்தியின் மூலமே என்பதைப் போல இடது காலை தூக்கி ஆனந்த நடனமாடி அருள்பாலிக்கிறார்.

ஸ்ரீ சக்கர மஹாமேரு என்பது சிவசக்தியின் ஒன்பது கட்டு அரண்மனை. ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரியின் மஹாசாம்ராஜ்யம். இந்த சாம்ராஜ்யத்தில் கணபதி, முருகன் முதல் காளி, பைரவர் வரை அனைத்து தெய்வங்களுக்கும் இடம் உண்டு.

ஸ்ரீ சக்கரத்தை வழிபடும் போது அனைத்து தெய்வங்களையும் ஒரே இடத்தில் வழிபாடு செய்யமுடியும். ஸ்ரீ சக்கரத்தில் வீற்றிருக்கும் தேவி ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரியின் பெருமை பேசும் நூல்கள் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் , சௌந்தர்யலஹரி, தேவி மகாத்மியம், நவரத்தினமாலை, அபிராமி அந்தாதி போன்றவை.



சௌந்தர்யலஹரியின் இரண்டாவது பாடலில் ஆதி சங்கரர் பேசும் போது ஸ்ரீ சக்தியின் திருப்பாதங்களில் இருந்து விழுகின்ற மண் துகள்களை வைத்து பிரம்மா பூலோஹம், புவர்லோஹம், ஸுவர்லோஹம், மஹர்லோஹம், ஜனலோஹம், தபலோஹம், ஸத்யலோஹம் எனும் மேல்லோகங்கள் ஏழையும், அதல, விதல, ஸுதல, ரஸாதல, தலாதல, மகாதல, பாதாளம் எனும் கீழ்லோகங்கள் ஏழையும் ஸ்ருஷ்டித்தார் என்கிறார்.

ஸ்ரீ மகாதேவியின் பாததூளியால் ஆதிசேஷன் உருவெடுத்து பிரம்மா படைத்த பதினான்கு உலகையும் தன் சிரசினால் தாங்கிகொண்டு இருக்கிறார்.

ஸ்ரீ ருத்திரனோ தேவியின் பாததூளியை கையிலெடுத்து “த்ரியம்பக” மந்திரத்தினால் பஸ்ம பொடியாக்கி தன் சிரசு முதல் பாதம் வரை பூசிக்கொண்டார்

பிரம்மனின் சக்தியான சரஸ்வதியும், விஷ்ணுவின் சக்தியான லக்ஷ்மியும் ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரியின் இரு புறமும் நின்று சாமரம் வீசி பணிவிடை செய்கிறார்கள்.

தேவி சிவனை அன்பால் நோக்கியபோது வல்லபை ஸித்தி லட்சுமியுடன் ஸ்ரீகணபதி தோன்றினார். ஸ்ரீ கணபதியும், ஸ்ரீ முருகனும் ஸ்ரீ சக்கரத்தில் அன்னையிடம் பால் அருந்தும் குழந்தைகள் .

ஸ்ரீ சக்ரம் அமைந்திருக்கும் அறையின் வலப்புறம் மகாகாளியும், இடதுபுறம் மகா பைரவரும் துவார சக்திகளாக அன்னைக்கு காவல் புரிகின்றனர்.

நவகிரகங்கள், 27 நட்சத்திரங்கள், 12 இராசிகளும், அன்னையை வலம் வருகின்றனர்.

இவ்வாறாக அனைத்து தெய்வங்களுக்கும் தலைமை பொறுப்பில் வீற்றிருக்கும் மஹா சாம்ராஜ்ய தாயினி அன்னை ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரி அருள்பாலிக்கும் அற்புதமானது ஸ்ரீ சக்ர மஹாமேரு.

ஸ்ரீ மஹாமேருவை தரிசனம் செய்தால் அனைத்து தெய்வங்களையும் வழிபட்ட பலன் நமக்கு கிடைக்கும்.

குலதெய்வம் தெரியாதவர்களுக்கு ஸ்ரீ சக்ர வழிபாடு ஒரு வரப்பிரசாதம். ஸ்ரீ சக்ரத்தை வழிபட்டால் குலதெய்வம் நிறைவடையும், ப்ரசன்னமாகும். ஸ்ரீ சக்கரத்திற்கு மேலான யந்திரமோ, ஸ்ரீ வித்யைக்கு மேலான மந்திரமோ, ஸ்ரீ லலிதாம்பிகைக்கு மேலான தேவதைகளோ இல்லை என்பது தனி சிறப்பு.

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.